வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 21.07.2022 வியாழக்கிழமை இதழ் : 227 பக்கங்கள் : 16




## ஜனாதிபதியானார் ரணில்! ஆதரவாக 134 வாக்குகள்!!



கொழும்பு, ஜூலை 21

நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பதில் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

ஜனாதிபதி தெரிவுக்காக நேற்று பாராளுமன்றத்தில் நடந்த இரகசிய வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக 134 எம். பிக்கள் வாக்களித்தனர். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும், அநுரகுமார திஸநாயக்க 3 வாக்குகளையும் பெற்றனர். அளிக்கப்பட்ட வாக்குகளில் 4 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பை புறக்கணித்தனர்.

15

## தமிழ் மக்களின் பொறுமை எதுவரையில்?

பொருளாதார நெருக்கடி சிங்களவர்களை வீதிக்குக் கொண்டுவந்தது. சிங்களவர் களால், நவீன துட்டகைமுவாகப் போற்றப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை உருவாகியது. சிங்களவக்ளின் கோபத்தை ஒரு கட்டத்துக்கு மேல் எதிர்கொள்ள முடியாததொரு சூழலில்தான், ராஜபக்ஷக்கள் அமைதியடைந்தனர். அந்த நேரத்தில், எதிர்கட்சித் தலைவரென்னும் வகையில், சஜித் பிரேமதாஸ நாட்டைப் பொறுப்பேற்றிருக்க வேண்டும். அவர் முன்வராத சூழலில், ரணில் விக்கிரமசிங்க அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது வேறு எந்தவொரு சிங்கள அரசியல்வாதியோ, தமிழ் மக்களின் அனைத்து பிரச்னைகளையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதுதான் இதுவரையான தமிழர் வரலாறு. (03ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் யதார்த்தம் புரியாமல் கூட்டமைப்பு வரலாற்றுத் தவறு!

## சட்டத்தரணி கே. வி. தவராசா சாடல்



கொழும்பு, ஜூலை 21

**அரசியல் நடப்பைப் புரிந்து கொண்டு மக்களுக்கு பயன்தரத்தக்க நிலைப்பாட்டில் தலைமைத்துவம் உறுதியாக நிற்க வேண்டும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் வரலாற்று தவறிழைத்துவிட்டது என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா தெரிவித்துள்ளார்.**

அத்துடன், பொறுப்புக்களை கடந்து செல்லாமல் மத்திய குழுவைக் கூட்டி நடந்த தவறுகள் - தப்புகளுக்கான காரணங்களை ஆராய்வது மட்டுமின்றி பொறுப்புக் கூறவேண்டியதும் மிகவும் இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்ட

15

## ராம் விடுதலை

கொழும்பு, ஜூலை.21

கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்து வந்த விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட தளபதி ராம் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு பெற்று விடுதலை செய்யப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி ராம் மீண்டும் 2015 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பயங்கரவாத ஒழிப்புப்

15

## ஊசிமூலம் போதையை எடுத்த இளைஞர் துடிதுடித்து மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஹெரோயின் போதைப் பொருளை ஊசி மூலம் எடுத்துக் கொண்ட 20 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்புத்துறையை சேர்ந்த இளைஞரே நேற்று புதன்கிழமை மாலை உயிரிழந்தார் என்று அறிய வருகின்றது.

உயிரிழந்த இளைஞர் நண்பர்களுடன் இணைந்து ஹெரோயின் போதைப் பொருளை ஊசி மூலம் செலுத்தியுள்ளார். ஊசி ஏற்றிய சில

15

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு சஜித் கட்சியின் 14 பேர் ஆதரவு!

கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியை சேர்ந்த 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் ஹரின் பெர்னாண்டோ எம். பி. தெரிவித்தார் என்று தகவல்கள் வெளியாகின.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 6 பேர் சிங்கள சமூகத்தவர்கள் என்றும், மிகுதி 8 பேர் தமிழ், முஸ்லிம் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

### யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## இன்றுமுதல் எரிபொருள் விநியோகம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

தேசிய எரிபொருள் விநியோக திட்டத்துக்கு அமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 46 எரிபொருள் நிலையங்கள் ஊடாக 92 ஒக்ரென் பெற்றோலும் 48 நிலையங்கள் ஊடாக ஓட்டோ டீசலும் விநியோகிக்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகிறது. இந்த நடவடிக்கை எதிர்வரும் 29ஆம் திகதி வரை தொடர்ந்து இடம்பெறும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

மேலும், எரிபொருள் விநியோகம் வாகன

15

## டலஸையே முன்னிலைப்படுத்தினோம் ஆனால், அவர் தோல்வியடைந்துவிட்டார்!

### இப்படி சொல்கிறார் மகிந்த எம். பி.



கொழும்பு, ஜூலை 21

டலஸ் அழகபெருமவை நாங்கள் முன்னிலைப் படுத்தினோம் - வாக்களித்தோம். இருப்பினும் அவர் தோல்வியடைந்தார். புதிதாக அமையவுள்ள அரசாங்கம் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். எந்த அரசாங்கம் அமைந்தாலும் நாட்டு மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். கட்சி எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய

15

## பிரிந்து செயல்பட்டது போதும் சகலரும் ஒன்றிணையவேண்டும்

### புதிய ஜனாதிபதி ரணில் அழைப்பு

கொழும்பு, ஜூலை. 21

இலங்கையில் நிலவரத்தைப் புரிந்துக் கொண்டு, இனியும் பிரிந்து செயற்படாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்னைகளுக்குத் தீர்வினைக் காண முன்வரவேண்டும் என்று இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, பாராளுமன்றில் அவர் ஆற்றிய விசேட உரையின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு இன்

15

## இப்படியும் நடக்கிறது

இன்று இந்தப் பத்தியில் எழுதுவதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. எழுதவேண்டிய பல விடயங்களையும் இன்று இந்த ஒரேபத்தியில் எழுதிவிடவும் முடியாது. இந்த வாரம் முழுவதும் எழுதவேண்டிவருமோ தெரியவில்லை.

நேற்று நள்ளிரவு சிறிதரன் எம். பியுடன் தொடர்புகொள்ள முடிந்தது. ஜனாதிபதி வேட்பாளரான டலஸ் அழகப்பெருமவை ஆதரிப்பது என்று முடிவெடுத்த சில மணி நேரமிருக்கும். நள்ளிரவை தாண்டியிருந்தது.

'இந்தத் தடவை மாத்திரமே ஓர் உறுதிமொழியை எழுத்தில் வாங்கமுடிந்தது. அதனால், நாங்கள் அவரை ஆதரிக்க முடிவு செய்தோம்'- வெட்டு ஒண்று துண்டு ரெண்டாக என்பதுபோல அவர் பதில் சொன்னார்.

கூட்டமைப்பு யாரை ஆதரிப்பது என்பதில் கடும் வாக்கு வாதங்கள் நடந்துகொண்டிருந்த கூட்டத்தில், டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கவேண்டும் என்று கட்சித் தலைவர் சம்பந்தன் பிடிவாதமாக நின்றபோது, அதற்கு எதிராக கடும் ஆட்சேபம் தெரிவித்தவர் சிறிதரன் என்பதை அறிந்திருந்தேன்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அண்மையில் அமெரிக்கா சென்று திரும்பியிருந்த சிறிதரன், அங்கிருந்து திரும்பிய பின்னர் ஊடக அறிக்கை ஒன்றை இந்த ஊர்க்குருவிக்கும் அனுப்பியிருந்தார்.

'ஈழத்தமிழர்களுக்காக சுதந்திரமான பொது வாக்கெடுப்புக்கு வழிகோலுமாறு, ஐக்கிய அமெரிக்க இராஜதந்திரிகளிடம் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரிக்கை.' என்ற தலைப்பில் அவர் அனுப்பியிருந்த அந்த அறிக்கை இன்றைய பத்திரிகையிலும் வெளிவந்திருக்கின்றது.

ஈழத்தமிழர் பிரச்னைக்கு தீர்வாக ஐ. நா. தலையீட்டுடன் பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்ற நாடுகடந்த தமிழீழ அரசின் கோரிக்கைக்கு வலுசேர்க்கும் வகையில்தான் சந்தித்த அமெரிக்க இராஜதந்திரிகளிடம் கோரிக்கை வைத்துவிட்டு தாயகம் திரும்பியிருந்த சிறிதரன், தாயகம் திரும்பிய கையுடன் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவுதொடர்பான கட்சிக் கூட்டத்தில் கலந்துகொண்டதால், நமது உரிமைகளை விட்டுக்கொடுக்க மாட்டார் என்ற நம்பிக்கை இருந்தது.

அதனால், அவர் சம்பந்தன் - சுமந்திரன் கூட்டணியின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்று நம்பியவர்களில் இந்த ஊர்க்குருவியும் ஒருவர்.

அதனால்தான், நீங்கள் எப்படி இந்த முடிவுக்கு வந்தீர்கள் என்று கேட்பதற்காகவே அவருடன் தொடர்புகொள்ள வேண்டியிருந்தது.

அவரிடம் ஒரு தலைவருக்குரிய பண்பு இருந்ததை முதலில் அறியமுடிந்தது. வெளிநாடு ஒன்றின் கோரிக்கை குறித்தும் அதனால் நாங்கள் அதனை மீறமுடியாது என்றும் கட்சித் தலைவர் கூறியதையோ அல்லது, கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது, ஓர் இராஜதந்திரியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட சுமந்திரன், அந்த இராஜதந்திரியின் விருப்பத்தை கட்சியினருக்கு அவர் மூலமே கூறியதைப் பற்றியோ ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

ஆனால், அவர் சொன்னது, எழுத்துமூலம் வேட்பாளர் உத்தரவாதம் தந்திருக்கிறார். இதற்கு முதலில் அப்படி யாருமே எழுத்தில் தரவில்லை என்பதைத்தான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நல்லாட்சி அரசின் காலம் அது. ரணிலுக்கு எதிராக இரண்டு தடவைகள் எதிர்க்கட்சியால் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

அந்த இரண்டு தடவைகளும் கூட்டமைப்பின் பதினைந்து உறுப்பினர்களின் ஆதரவுடனேயே ரணில் அந்த நம்பிக்கையில்லா பிரேரணை வாக்கொடுப்பில் தப்பிப் பிழைத்தார்.

முதலாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பின்போதும், வழக்கம்போலவே வாக்கெடுப்புக்கு முதல்நாள் கூடிய கூட்டமைப்பு, ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவுசெய்தது. அப்போதும், தாங்கள் முன்வைத்த பன்னிரண்டு கோரிக்கைகளை ரணில் எழுத்து மூலமாக ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டதாகவும் அதனாலேயே அவருக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவு செய்ததாகவும் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

முதலாவது நம்பிக்கை வாக்கெடுப்பிற்கு பதின்மூன்று மாதங்களின் பின்னர் என்று நினைக்கின்றேன், மீண்டும் ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பு. அந்த வாக்கெடுப்பிலும் வழக்கம்போல முதல் நாள் கூடிய கூட்டமைப்பு ரணிலிடம் மேலும் பதினைந்து கோரிக்கைகளை எழுத்தில் கொடுத்து உத்தரவாதம் வாங்கியதாக அறிவித்திருந்தது.

ஆனால், அவையெல்லாம் சிறிதரனுக்கு தெரிந்திருக்கவில்லையா? அல்லது மறந்துவிட்டாரா என்பது தெரியவில்லை.

அதிலும் சிறப்பு என்னவென்றால், முதலாவது நம்பிக்கை வாக்கெடுப்பில் ரணில் உறுதியளித்த பன்னிரண்டு விடயங்களையும் சேர்த்துத்தான் பதின்மூன்று மாதங்களுக்கு பிறகு ரணில் மீண்டும் உறுதியளித்தார்.

இவையெல்லாம் பழைய சங்கதிகள்தான், ஆனால், இப்போது முதல்தடவையாக அல்ல, இதற்கு முன்னரும் கூட்டமைப்பினராகிய நீங்கள் எழுத்தில் உறுதிமொழிகளை வாங்கியிருக்கிறீர்கள் என்பதை சிறிதரனுக்கு ஞாபகப்படுத்துவதற்காகவே இதனை இப்போது இங்கே எழுதவேண்டியதாகியது.

இவை எல்லாம் சிறிதரனுக்கு தெரியாமல் நடந்திருந்தால், அதற்கு அவர் பாவம், அவரும்தான் என்னசெய்வது?

**- ஊர்க்குருவி**

# காவல் படை தொடர்பான வழக்கு; யாழ். மாநகர முதல்வர் விடுவிப்பு

## மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் மாநகர சபையால் உருவாக்கப்பட்ட "காவல் படை" தொடர்பான வழக்கில் இருந்து, யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன், காவல் படையின் சீருடைகளையும் மீள கையளிக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில், யாழ். மாநகர சபையினரால் காவல் படை உருவாக்கப்பட்டது. யாழ்.மாநகர சுகாதாரத்தை மேம்படுத்துதல், குப்பைகளை பொது இடங்களில் வீசுவார்கள், பொது இடங்களில் எச்சில் துப்புபவர்கள் உள்ளிட்டவர்களுக்கு எதிராக தண்டம் விதித்தல், தேவைப்படின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தல் ஆகிய செயல்பாடுகளை முன்னெடுக்கும் முகமாகவே காவல் படை உருவாக்கப்பட்டது.

குறித்த காவல் படையின் சீருடையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையினரின் சீருடையை ஒத்தது என பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர். முன்னதாக காவல் படையை சேர்ந்தவர்களிடம் விசாரணைகளை ஆரம்பித்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர், தொடர்ந்து யாழ். மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபனிடமும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதனை தொடர்ந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கு யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனை அழைத்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர், முதல்வரை கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா அழைத்து சென்றனர்.

விசாரணைகளின் பின்னர் மறுநாள், முதல்வரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து, நீதிமன்றால் முதல்வர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் மன்றுக்கு அறிவித்தமையை அடுத்து யாழ். மாநகர முதல்வரை வழக்கில் இருந்து மன்று விடுவித்து விடுதலை செய்ததுடன், சான்றுபொருட்களாக மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த காவல் படையின் சீருடைகளையும் மாநகர சபையிடம் ஒப்படைக்க மன்று உத்தரவிட்டது.

இதேவேளை, யாழ். மாநகர சபைக்கு உற்பட்ட பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட காவல் படையை புலிகளின் மீள் உருவாக்கம், புலிகளின் காவல்துறையின் சீருடையை ஒத்தது என பொய்க்குற்றம் சுமத்தி வழக்கு தொடரப்பட்டது.

அந்த வழக்கில் இருந்து தற்போது முதல்வர் விடுவிக்கப்பட்டதுடன், சீருடைகளையும் மீள கையளித்து உள்ளதால், காவல் படை என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்திற்காக மீள செயற்படும் என மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன் தெரிவித்தார். (ஐ)

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்றுமுதல் பெற்றோல் விநியோகிக்கப்படும் இடங்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 29ஆம் திகதி வரை பெற்றோல் விநியோகிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பெயர்களை மாவட்ட செயலர் அறிவித்துள்ளார்.

அவரின் அறிவிப்பின்படி, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் - பண்டத்தரிப்பு, கே. தேவகுருநாதன் - நல்லூர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் - சாவகச்சேரி, அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் - மல்லாகம், யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கம் - யாழ்ப்பாணம், எஸ். சரவணபவன் - யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் - தெல்லிப்பழை, சங்கானை ப. நோ. கூ. சங்கம், லிவர்பூல்ஸ் நேவிகேசன் - யாழ்ப்பாணம், கே. சண்முகரத்னம் காரைநகர்.

ஜே. நடராஜா - உரும்பிராய், என். விஸ்வலிங்கம் - சிறுப்பிட்டி, கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் - நெல்லியடி, தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம் - கைதடி, மானிப்பாய் பரிஸ் ப. நோ. கூ. சங்கம் - மானிப்பாய், தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் - கொடிகாமம், ராஜன் உமையாள் - யாழ்ப்பாணம், சி. வேதநாயகி - புன்னாலைக்கட்டுவன், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் - வல்வெட்டித்துறை, நல்லூர் ப. நோ. கூ. சங்கம் - நல்லூர்.

வலி. கிழக்கு வடக்கு பிரிவு ப. நோ. கூ. சங்கம் - அச்சுவேலி, என். எஸ். நாகலிங்கம் அன் சன்ஸ் - சுன்னாகம், வலி. கிழக்கு தெற்குப் பிரிவு ப. நோ. கூ. சங்கம் - கோப்பாய், செல்லையா உதயகுமார் - சண்டிலிப்பாய், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் - உடுவில், புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம் - புங்குடுதீவு, சிறீலங்கா கூட்டுறவு மார்கெட்டிங் பெடரேஷன் - யாழ்ப்பாணம், வேலணை ப. நோ. கூ. சங்கம் - வேலணை, புலோலி ப. நோ. கூ. சங்கம் - புலோலி, ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் - ஊர்காவற்றுறை.

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் - குஞ்சர்கடை, ஏ. எம். தங்கநாயகம் - கோப்பாய், கமலாதேவி கதிரேசம்பிள்ளை - சுன்னாகம், எஸ். தர்மவரதன் - மருதனார்மடம், கே. எஸ். பொன்ம்பலம் அன் சன் - கைதடி, ஏ. எம். தனநாயகம் - கொக்குவில், திருமதி ஏ. பத்மநாதன் - வல்வெட்டித்துறை, எஸ். சுதர்சன் - நாவற்குழி - யாழ்ப்பாணம், முருகேசு குணரத்தினம் - யாழ்ப்பாணம், ஜே. ஸ்ரீசங்கர் - பருத்தித்துறை,

யோகேஸ்வரி சின்னையா - மந்திகை, திருமதி ஜே. கனகரஞ்சன் அன் சகோதரிகள் - சுன்னாகம், ரத்னம் எரிபொருள் நிரப்பு நிலையம் - திருநெல்வேலி, கே. ஜெயபிரணவன் - கொக்குவில், தர்சினி கண்ணதாசன் - சண்டிலிப்பாய், கந்தசாமி லோகராணி - தெல்லிப்பழை ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொது மக்கள் பெற்றோலை (92 ஒக்ரென்) பெற முடியும். (ஐ-3)

## கொரோனாவுக்கு இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்று காரணமாக மேலும் இருவர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இருவரே இவ்வாறு கொரோனா தொற்றால் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூலை 21

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் நெருக்கடிகள் நீங்கி, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் இன்று வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - தென்மராட்சி - மிருசுவில் - வடக்கு மன்னன் குறுச்சி நெல்லிக்கிணற்றடி தான்தோன்றி கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ தி. ஆர்னிகன்சர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

Eelanadu ஈழநாடு
21.07.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆடி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370


# தமிழ் மக்களின் பொறுமை எதுவரையில்?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏனையவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசம் இருந்தது. அதாவது, ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்நியமானவரல்ல. ஏனெனில், கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பினர் - குறிப்பாக, சம்பந்தனும் சுமந்திரனும் ரணிலோடு அரசியல் தேனிலவில் இருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து புதியதோர் அரசியல் யாப்பை கொண்டுவரும் முயற்சியில், ஐந்து வருடங்களை செலவிட்டிருந்தனர். ஆனால், ரணில் பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் திடீரென்று சுமந்திரன், ரணில் எதிர்ப்பு பிரசாரமொன்றில் வெறித்தனமாக ஈடுபட்டார். அவர் ஏன் அவ்வாறு செய்கின்றார் என்னும் கேள்விக்குக் கூட்டமைப்பிலுள்ள எவரிடமும் பதிலில்லை. இவ்வாறானதொரு சூழலில்தான், கோட்டாபயவின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, ரணில் ஜனாதிபதி ஆவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின.

ஆரம்பத்திலிருந்தே சுமந்திரனின் நிலைப்பாடு ரணிலை எதிர்ப்பதாக மட்டுமே இருந்தது. இதன் விளைவாக, முதலில் சஜித் பிரேமதாஸ பின்னர் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் சுமந்திரனின் நிலைப்பாடு, இறுதியில் கூட்டமைப்பின் நிலைப்பாடாக மாறியது. சுமந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளராக நியமிக்கப்பட்டதிலிருந்து, கூட்டமைப்பின் அனைத்து முடிவுகளிலும் சுமந்திரனின் மேலாதிக்கமே கோலோச்சியது. ஒரு கட்சியில், தனிநபர்களின் செல்வாக்கு தொடர்பில் நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், முடிவுகள் மக்களின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கப்படுகின்றதா அல்லது தனிநபர்களின் சுயநலன்களிலிருந்து தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றனவா - என்பதுதான் கேள்வி.

யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதின்மூன்று வருடங்களில் சம்பந்தன் தலைமை யில் மேற்கொள்ளப்பட்ட எந்தவோர் அரசியல் தீர்மானங்களும் தமிழ் மக்களுக்கு நன்மைகளை கொண்டுவரவில்லை. 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவளித்தது சரியானது. ஆனால், அதன் பின்னர் கிடைத்த வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்தும் பொறிமுறையொன்றை சம்பந்தன் வகுக்கவில்லை. அது அனைத்தும் சுமந்திரனாலேயே திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. அனைத்துமே புஸ்வாண மாகியது. சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் அரசியல் முடிவுகள் எப்போதுமே தவறுகளில்தான் முடிவுறும் என்பது, மீண்டுமொரு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு தரப்புக்களுக்கிடையில் இடம்பெறும் போட்டியின்போது, நிலைமைகளை சரியாக ஆராயாமல் தீர்மானங்களை எடுக்கக்கூடாது. அரசியலில் இதுவொரு சாதாரண விடயம். ஆனால், இந்த சாதாரண விடயம்கூட சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் விளங்க வில்லை. 2015இல் ஆட்சி மாற்றமொன்றை உந்தித்தள்ளியதில் இந்திய மற்றும் மேற்குலக நாடுகளின் ஆர்வங்கள் இருந்தன என்பதில் உண்மைகள் உண்டு. சீன சார்பு மகிந்த ராஜபக்ஷவின் வளர்ச்சியை பலரும் விரும்பியிருக்கவில்லை.

ஆனால், 2015 ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இடம்பெற்ற விடயங்கள், வெறும் ஆட்சி மாற்றங்களால் மட்டும் விடயங்களை கையாள முடியாதென்னும் உண்மையை உணர்த்தியது. இந்த நிலையில் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்புக்களில் வெளித் தரப்புக்களின் தலையீடுகளுக்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே இருந்தன. எனினும் இந்தியா, ரணிலை தோற்கடிக்கச் சொல்வதான ஒரு கதையும் சம்பந்தன் - சுமந்திரனால் கூறப்பட்டிருககின்றது. இதனை இதுவரையில் சம்பந்தனோ, சுமந்திரனோ மறுக்கவில்லை. ஆனால், இந்திய தூதரகம் இதனை மறுத்திருக்கின்றது. இதன் மூலம் இந்தியாவின் பெயராலும் சம்பந்தனும் சுமந்திரனும் விடயங்களை திசைதிருப்ப முயற்சித்திருக்கின்றனர் என்பது தெளிவாகின்றது. அந்தளவுக்கு இதிலுள்ள சுயநலம் என்ன? இது பாரதூரமான தவறாகும். தமிழர் தரப்புக்களை இராஜதந்திர சமூகத்திலிருந்தும் அந்நியப்படுத்தும் ஒரு செயலாகும்.

சம்பந்தன் சுமந்திரனின் முடிவால், மீண்டுமொரு முறை, தமிழ் மக்களின் அரசியல் வெறும் சுயநலன்களுக்காகப் பந்தாடப்பட்டிருக்கின்றது. எங்களுடைய அரசியல் நிலைப்பாடுகளில் உறுதியாக இருக்கும் அதேவேளை, எங்களுடைய விடயங்களை செவிமடுக்கக் கூடிய ஆட்சியார்களோடு, ஊடாடுவதற்கான இடைவெளியையும் பேணிப்பாதுகாக்க வேண்டும். அதுதான் அரசியல் சாணக்கியம். ஒப்பீட்டடிப் படையில் ரணில் உரையாடக்கூடிய ஒருவர். ஏற்கனவே கூட்டமைப்போடு பணியாற் றிய ஒருவர். ஆனால், அவ்வாறான ஒருவரை எதிர்த்து, மீண்டும் சம்பந்தனும் சுமந்திரனும் தமிழ் மக்களுக்கான வாய்ப்புக்களை நாசப்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் தொடர்ந்தும் இவ்வாறுதான் செயல்படப் போகின்றார்கள் என்றால், தமிழ் சமூகம் எதுவரையில் இதனை அனுமதித்துக் கொண்டிருக்கப் போகின்றது? முக்கியமாக தமிழ் புதிய தலைமுறை இவ்வாறான தவறுகளின் ஆடுகளத்தை இன்னும் எத்தனை காலத்துக்கு சகித்துக் கொண்டிருக்கப் போகின்றது?

# ஜனாதிபதி ரணில்!

அனந்த பாலகிட்ணர்



இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பாராளுமன்ற உறுப்பினர்களிடையே அரசியலமைப்பின் பிரகாரம் நடத்தப்பட்ட தேர்தலில் பதில் ஜனாதிபதியாக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

இன்றைய தெரிவையடுத்து இன்னும் இரு வருட காலம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் வரை பதவியிலிருப்பார்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் அகால மரணத்தையடுத்து அப்போது பிரதமராக இருந்த டி. பி. விஜயதுங்க ஜனாதிபதியானார். அவரைத் தொடர்ந்து காமினி திஸநாயக்க ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை எதிர்த்து போட்டியிடவிருந்த நிலையில் அவர் அகால மரணத்தை தழுவியிருந்தார். இதைத் தொடர்ந்து திஸநாயக்கவின் பாரியார் அந்தத் தேர்தலில் போட்டியிட்டார்.

இதனையடுத்து 2001, 2005 இல் இடம்பெற்ற அனைத்து ஜனாதிபதி தேர்தல்களிலும் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்ட போதிலும் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

தற்போது நாட்டில் நிலவுகின்ற அசாதாரண பொருளாதார நிலவரம் காரணமாக காலிமுகத்திடலில் ஆரம்பமான ஆர்ப்பாட்டம் ஒரு போராட்டமாக வெடித்து பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷவை பதவி விலக வைத்ததோடு ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவையும் நாட்டை விட்டு வெளியேற வைத்திருந்தது.

இதனையடுத்து, பிரதமராக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார். அரசியலில் ரணில் விக்கிரமசிங்கவும், மகிந்த ராஜபக்ஷவும் இருவேறு கட்சிகளைச்சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால், நேற்று இடம்பெற்ற பாராளுமன்றம் மூலமான ஜனாதிபதி தேர்தலில் ரணிலின் வெற்றிக்குப் பின்புலத்தில் ஆளும் கட்சியின் பொதுஜன பெரமுனவினர் இருந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது.

இதனையடுத்து தற்போது நாட்டின் எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ளார். அரசியலில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பாசறையில் உருவாகிய ரணில் விக்கிரமசிங்க, ஓர் அரசியல் பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். அத்துடன், இலங்கை பத்திரிகை துறையின் பிதாமகரும் ஏரிக்கரை பத்திரிகை நிறுவன ஸ்தாபருமான டி. ஆர். விஜயவர்த்தனவின் பேரனுமாவார். காலஞ்சென்ற இராஜதந்திரி எஸ்மன்ட் விக்கிரமசிங்கவின் புதல்வாரன ரணில் விக்கிரமசிங்க, காலஞ்சென்ற பாராளுமன்ற ஓம்புட்ஸ்மன் சாம் விஜயசிங்கவின் மருமகனுமாவார்.

நேற்று பாராளுமன்றில் இடமபெற்ற ஜனாதிபதிக்கான தேர்தலில் வேட்பாளர்களான டலஸ் அழகப்பெரும, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையே கடும் போட்டி நிலவும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இருந்தபோதிலும் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளை பெற்றார். டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும் மக்கள் விடுதலை முன்னணியின் அநுரகுமார திஸநாயக்க 3 வாக்குகளையும் பெற்றனர்.

இரு வருடங்களே ஜனாதிபதி பதவியில் இருக்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க முன்பாக தற்போதுள்ள சவாலாக இருப்பது பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதேயாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போதுள்ள இலங்கையின் அரசியல்வாதிகளில் மூத்தவராக இருப்பதோடு விரிவான சர்வதேச தொடர்புகளையும் கொண்டுள்ளார்.

இந்நிலையில், பொருளாதார பிரச்னையே தற்போது நாட்டில் முக்கியமானதாக இருக்கின்ற காரணத்தால் அதனை எதிர்கொள்வதற்கு சர்வதேச உதவிகளை புதிய ஜனாதிபதி பெரிதும் எதிர்பார்க்க முடியும். அத்துடன், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேச சமூகத்தினால் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படாதவராக இருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார பிரச்னைகளை பொறுத்தவரை ஒரு நெருப்பாற்றை கடக்க வேண்டியவராக இருக்கின்றார்.

இதேவேளை கடந்த மே மாதம் முதல் காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்ற கோட்டா கோ ஹோம் ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது அடுத்த இலக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று தெரிவித்துள்ளனர். தமது ஆர்ப்பாட்டம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரானது மட்டுமல்ல. ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிரானதெனக் குறிப்பிட்டுள்ளனர்.

ஜனாதிபதியாக ரணில் பதவியேற்றதுமே கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான பாராளுமன்ற கட்டடத்தை அண்மித்துள்ள காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் சிலையை சூழவர 50 மீற்றர் சுற்றுவட்டப் பகுதியை ஆள் நடமாட்டமற்ற பகுதியாக அறிவித்துள்ளனர்.

இதன் மூலம் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாம் பதவியேற்றதுமே தம்மிடம் ஆர்ப்பாட்டக் காரரின் பருப்பு வேகாது என்ற செய்தியை தந்துள்ளார்.

பொருளாதார பிரச்னையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கொள்ளவுள்ள முக்கிய சவாலாக இருக்கின்ற நிலையில் அரசியல் ரீதியாகக் காணப்படுகின்ற வடக்கு - கிழக்கு பிரச்னைக்கும் அவர் தீர்க்கமான முடிவுகளை எட்ட வேண்டியதும் இன்றியமையாததாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 21 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 05
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 1.30 - 3.00
திதி : அட்டமி




**மேடம்**
குருவால் நன்மை அதிகரிக்கும். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு லாபம் காண்பீர்கள். நெருக்கடி விலகும். குடும்பத்தினரின் நலன் கருதி மேற்கொண்ட செயல் நிறைவேறும்.

**இடபம்**
வருமானம் அதிகரிக்கும். இருப்பிடத்தை மாற்றம் செய்ய நினைப்பீர்கள். வேலைக்காக மேற்கொண்ட முயற்சி நிறைவேறும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்.

**மிதுனம்**
எதிர்பார்த்த முயற்சி வெற்றியாகும். வரவு அதிகரிக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்திற்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கடகம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகளுக்கு உறவினர் ஆதரவுடன் தீர்வு காண்பீர்கள்.வருவாயை எதிர்பார்த்து நீங்கள் மேற்கொண்ட முயற்சி லாபத்தை உண்டாக்கும். செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்**
யோசித்து செயல்பட வேண்டிய நாள். பயணத்தால் அலைச்சல் அதிகரிக்கும். வரவு செலவில் சங்கடம் ஏற்படும். எதிர்பாராத செலவால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள்.

**கன்னி**
உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். புதிய நட்பினால் உங்கள் எண்ணம் ஈடேறும்.

**துலாம்**
தடைகளைத் தாண்டி உங்கள் முயற்சியில் லாபம் காண்பீர்கள். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். உங்கள் நீண்டநாள் கனவு நிறைவேறும். செயலில் இருந்து வந்த தடை விலகும்.

**விருட்சிகம்**
வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.நேற்று இழுபறியாக இருந்த ஒரு செயல் இன்று முடிவடையும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி எளிதில் நிறைவேறும்.

**தனுசு**
உற்சாகத்துடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவால் உங்கள் எண்ணம் நிறைவேறும். தடைப்பட்டிருந்த செயல் இன்று நிறைவேறும்.

**மகரம்**
உறவினர்கள் ஒத்துழைப்புடன் முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர்கள். மறைமுக எதிர்ப்புகளை முறியடித்து உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

**கும்பம்**
வேலை பார்க்கும் இடத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். அரசு வழியில் ஆதாயம் காண்பீர்கள். குடும்ப நலன் கருதி மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும்.

**மீனம்**
பொதுகாரியங்களில் துணிச்சலாக செயல்படுவீர்கள். மதிப்பு கூடும் நாள். நெருக்கடிகளை சமாளிப்பீர்கள். நிம்மதியான நாள் உங்கள் மனம் விரும்பியபடி செயல்பட்டு ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

# இலங்கையில் அமைதி நிலவுவதற்கு ஈழத்தமிழருக்கு சுயநிர்ணய உரிமை!

*சென்னை, ஜூலை 21*

இலங்கை அமைதி காண வேண்டும் என்றால் ஈழத்தமிழர்களுக்கு சுய நிர்ணயம் உரிமை வேண்டும் என வைகோ வலியுறுத்தி உள்ளார்.

ம. தி. மு. க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை நிலைமை குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்தை மத்திய அரசு ஏற்பாடு செய்தமைக்கு வாழ்த்துகிறேன். இலங்கை மக்கள், நபர்களை மாற்றினால் போதும் என்று போராடவில்லை. அரசியல் சட்டத்தையே மாற்ற வேண்டும் என்று போராடுகிறார்கள்.

தமிழர்களை நசுக்குவதற்காக சிங்களர்கள் இராணுவத்தை வலுப்படுத்தினார்கள். பல நாடுகளிலிருந்து ஆயுதங்களைப் பெற்றார்கள். ஈழத் தமிழர்கள் குடியிருப்பு முழுவதும் இராணுவ மயம்தான். சிங்கள இராணுவம் இனப்படுகொலை செய்தது. தமிழர் பகுதிகளில் இராணுவத்தைக் குவித்து வைத்திருக்கிறது.

ஒவ்வொரு தமிழர் வீட்டுக்கு முன்பும் சிங்களச் சிப்பாய் துப்பாக்கியுடன் நிற்கிறான். இராணுவம் அங்கிருந்து வெளியேற வேண்டும். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக சேர்க்கப்பட வேண்டும். தமிழர்களுக்கு சுயநிர்ணயம் வேண்டும். இவை எல்லாம் செய்தால் தான் இலங்கையில் அமைதி காண முடியும் - என்றுள்ளது.

# தமிழர், முஸ்லிம், மலையக தமிழர்கள் இடைக்கால அரசில் பங்கேற்க வேண்டும்

*புதுடில்லி, ஜூலை 21*

இலங்கையில் இடைக்கால அரசாங்கம் அமைய இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தி உள்ளது. இதில், சிங்களவருடன் தமிழர், மலையக தமிழர், முஸ்லிம்களும் இடம்பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கை பிரச்னை தொடர்பாக நேற்றுமுன்தினம் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அனைத்துக்கட்சிக் கூட்டம் நடத்தினர். டில்லியில் நடைபெற்ற இக் கூட்டத்தில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், பொதுச்செயலாளர் டி.ரவிகுமார் ஆகியோரும் பங்கேற்றனர். அப்போது, மத்திய அமைச்சர்களிடம் தங்கள் கட்சி சார்பில் மத்திய அரசுக்கு ஒரு கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தனர்.

அதில், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் தலையீடு பாதுகாப்பு நலன்களையும், பொருளாதார நலன்களையும் சார்ந்ததாக இருக்கக்கூடாது. அந்த நாட்டின் மக்களுடைய நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும். இலங்கையில் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாக ஓர் இடைக்கால அரசு அமைப்பதற்கு இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

இதில், சிங்களவர்களின் பிரதிநிதிகள், தமிழர் பிரதிநிதிகள், மலையகத்தில் உள்ளவர்களின் பிரதிநிதிகள், முஸ்லிம்களின் பிரதிநிதிகள் பங்குபெறுவதை உறுதி செய்யவேண்டும். இராணுவத்தையும், அடக்குமுறை சட்டங்களையும் பயன்படுத்துவதை இலங்கையின் தற்காலிக ஜனாதிபதி கைவிட வலியுறுத்தவேண்டும். இலங்கை மக்களின் விருப்பம்போல வல்லுநர்கள், அறிவுஜீவிகளைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து அதன் வழிகாட்டுதலில் இடைக்கால அரசு செயல்பட வேண்டும்.

அயல்நாடுகளிலிருந்து ராணுவ உதவி பெறுவதை தவிர்க்குமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும். இலங்கையின் பொருளாதார சிக்கலைத் தீர்ப்பதற்கு இடைக்கால திட்டம் ஒன்றை தயாரிக்க இந்திய அரசு உதவ வேண்டும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளவாறு தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வை உறுதி செய்ய இந்திய அரசு வலியுறுத்த வேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களை தாக்கும் போக்கை நிறுத்தவேண்டுமென இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

2022 செப்டம்பரில் நடைபெறவுள்ளயூ. என். எச். சி. ஆர். கூட்டத்தில் 2009 இல் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு நீதி கிடைப்பதற்கான முயற்சிகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இந்திய அரசு 2009 இல் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு உடன்படுமாறு புதிதாக அமையும் அரசை வலியுறுத்த வேண்டும். ஈழத் தமிழர் பிரச்னை தொடர்பாக பொது வாக்கெடுப்பு நடத்தவும் வலியுறுத்த வேண்டும் - என்றுள்ளது.

### அ. தி. மு. க. தலைமையக விவகாரம்:

# உயர்நீதிமன்ற தீர்ப்பால் திறப்பு பழனிசாமி வசம்!

*சென்னை, ஜூலை 21*

அ. தி. மு. க. தலைமை அலுவலகத்திற்கு வைக்கப்படிருந்த சீலை அகற்றக் கோரி எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ. பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், தலைமை அலுவலகத்தின் சாவியை கட்சியின் இடைக்கால பொதுச் செயலாளரான எடப்பாடி பழனிசாமியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

ஒற்றைத் தலைமை பிரச்னையால் அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தில் கடந்த 11ஆம் திகதி பன்னீர்செல்வம், பழனிசாமி ஆதரவாளர்கள் இடையே மோதல் ஏற்பட்டது. இதனால், சட்டம் - ஒழுங்கு பிரச்னையைக் காரணம் காட்டி அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தை பூட்டி சீல் வைக்கப்பட்டது.

இந்த சீலை அகற்றக் கோரி அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளர் என்ற முறையில் பழனிசாமியும், அ. தி. மு. கவின் ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் ஓ.பன்னீர்செல்வமும் உயர் நீதிமன்றத்தில் தனித் தனியாக மனு தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தீர்ப்புக்காக ஒத்திவைத்திருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அ. தி. மு. க. தலைமை அலுவலகத்திற்கு வைக்கப்பட்டுள்ள சீலை அகற்றவும், தலைமை அலுவலகத்தின் சாவியை உடனடியாக எடப்பாடி பழனிசாமியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

மேலும், விரும்பத்தகாத சம்பவங்களை தவிர்க்கும் வகையில் அ. தி. மு. க. தலைமை அலுலகத்தில் தொண்டர்களை ஒரு மாத காலத்துக்கு அனுமதிக்கக்கூடாது. அ. தி. மு. க. தலைமை அலுவலகத்திற்கு தேவையான பாதுகாப்பை பொலிஸார் வழங்க வேண்டும்" என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (ஐ)

# திருச்சி மத்திய சிறப்பு முகாமில் அதிகாரிகள் திடீர் சோதனை!

*திருச்சி, ஜூலை 21*

திருச்சி மத்திய சிறப்பு முகாமில் இலங்கை தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் அதிகாரிகள் நேற்று திடீர் சோதனையை நடத்தினர்.

முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகள் விரைவில் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தேசிய புலனாய்வு பிரிவை சேர்ந்த 60 அதிகாரிகள் நேற்று அங்கு ஆய்வை மேற்கொண்டனர். நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் இந்த ஆய்வு இடம்பெற்றது. இதன்போது விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய ஆவணங்கள், நூல்கள், மடிக் கணனிகள் என்பவை கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சோதனை நடவடிக்கையை அடுத்து சிறை வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (ஐ)

# டலஸ்-தமிழ் கூட்டமைப்பு இடையிலான உடன்படிக்கை விவரம் வெளியாகியது!

## 10 அம்சங்கள் அடங்கிய கோரிக்கை முன்வைப்பு

**கொழும்பு, ஜூலை 21**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி தெரிவில் போட்டியிட்ட டலஸ் அழகப்பெருமவுக்கும் இடையே எட்டப்பட்ட உடன்பாட்டின் விவரம் வெளியாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன் தினம் மாலை 06.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர். இரா சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்றது.**

*இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட கூட்டமைப்பின் 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.*

*இக்கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் டலஸ் அழகப்பெரும, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தற்போதைய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டனர்.*

*இதன்போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் முன்வைக்கப்பட்ட கீழ்வரும் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்ட டலஸ் அழகப்பெரும, சஜித் பிரேமதாஸ ஆகிய இருவரும், தாம் பதவிக்கு வந்து, மூன்று தொடக்கம் ஆறு மாத காலம் முடிவடைவதற்குள் குறித்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தி நிரந்தரத் தீர்வு காண்பதாகவும், இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வை எட்டுவதற்கான உடனடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதாகவும் ஏற்றுக்கொண்டு 10 பாராளுமன்ற உறுப்பினர்களதும் முன்னிலையில் எழுத்து மூல உடன்படிக்கையில் ஒப்பமிட்டனர்.*

*1. நீண்டகாலமாக காரண மற்று சிறையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் ஒருதொகுதியினரை மூன்று மாத காலத்துக்குள் முதற்கட்டமாக விடுதலை செய்வது.*

*2. அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை 1991ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதுடன் கணக்காளர் ஒருவரையும் நியமித்தல்.*

*3. வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் தனிப்பட்ட காணிகளிலும், பொதுப்பயன்பாட்டுக்குரிய அரச காணிகளிலும் அடாத்தாக முகாமிட்டிருக்கும் இராணுவத்தினருக்கு அந்தக் காணிகளை நிரந்தரமாக வழங்கும் முகமாக, நில அளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் அளவீட்டுப் பணிகளை உடனடியாக நிறுத்துதல்.*

*4. தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனியவளத் திணைக்களம் உள்ளிட்டவற்றால், வடக்கு, கிழக்கு தமிழர் நிலங்களில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்களை உடன் நிறுத்துதல்.*

*5. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குதல் மற்றும் அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை முதலில் வெளிப்படுத்தல்.*

*6. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் செயலகத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்த உதவுதல்.*

*7. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநிறுத்தவும், உண்மையைக் கண்டறிவதற்கும் உடனடி நடவடிக்கை எடுத்தல்.*

*8. வடக்கு, கிழக்கிலுள்ள தனியார் காணிகளிலிருந்து படையினரை வெளியேற்றி, தமது சொந்த நாட்டில் இன்னும் அகதிகளாக உள்ள எமது மக்கள் தமது பூர்வீக நிலங்களில் குடியேற வழிவகை செய்தல்.*

*9. வடக்கு, கிழக்கில் குடிகொண்டிருக்கும் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி அமைத்தல்.*

*10. கடந்த எண்பது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழர்களின் உரிமைக்கான அரசியல் தீர்வுக்காக, காலதாமதமற்ற உடனடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல்-என்பன அந்தக் கோரிக்கைகளாகும்.*

*(அ)*



# சேலைன் போத்தலுடன் வாக்களித்தார் எம்.பி.!

*கொழும்பு, ஜூலை 21*

*8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு, பாராளுமன்றில் நேற்று இடம்பெற்றது.*

*சமன் பிரிய ஹேரத் எம்.பி. சுகயீனம் காரணமாக முன்னுரிமை அடிப்படையில் வாக்கினைப் பதிவு செய்தார். அவர் சேலைன் போத்தலுடன் சபைக்கு வந்திருந்தார்.*

*வாக்களிப்பின் பின்னர் வைத்தியசாலை சென்றார். மற்றுமொரு எம்.பியும் சிகிச்சை பெற்ற நிலையில் நேற்று வாக்களிக்க வந்திருந்தார்.*

*சபையின் அனுமதியுடன் இருவருக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. (அ)*

# டலஸ்க்கு வழங்கிய ஆதரவால் கூட்டமைப்புக்குள் குழப்பநிலை?

*கொழும்பு, ஜூலை 21*

*புதிய ஜனாதிபதி தேர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள சமூக வலைத் தளப் பதிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கள் குழப்ப நிலை நிலவுவதை பகிரங்கப் படுத்தியுள்ளது.*

*நேற்று முன்தினம் இரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ளதாக ஊடகங்களுக்கு எம்.ஏ.சுமந்திரன் அறிவித்திருந்தார்.*

*இந்நிலையில் அவர் நேற்று தன்னுடைய சமூக வலைத் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.*

*அதில் சக உறுப்பினர்கள் முதுகெலும்பு உள்ளவர்களா? என்ற தொனிப்பட விமர்சிக்கப்பட்டுள்ளமை பலத்த கேள்விகளை எழுப்பியுள்ளது.*

*அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:*

*“என்னைப் பொறுத்தவரையில் ஒரு கூட்டு தீர்மானம் எடுத்தால் அதன் பொறுப்பு முழுமையாக தீர்மானம் எடுத்த அத்தனை பேரையும் சாரும். அந்த பொறுப்பை எடுக்க மறுப்பவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள். அந்த பொறுப்பை நான் தனியே சுமக்க நேரிட்டாலும் அதற்கும் நான் தயார். எத்தனை பேருக்கு முதுகெலும்பு இருக்கிறது என்று பார்போம்.”-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)*

# பொலிஸாரின் பயணக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம்

*கொழும்பு, ஜூலை 21*

*பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்த பயணக் கொடுப்பனவை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

*அதன்படி, தற்போது வழங்கப்பட்டு வரும் பயணக் கொடுப்பனவு 14 நாட்களிலிருந்து 21 நாட்களாக அதிகரிக்கப்பட்டு 2023 ஜனவரி 1ஆம் திகதி முதல் வழங்கப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (அ)*

# நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில தினங்களாக உயர்வு

*கொழும்பு, ஜூலை 21*

*நாட்டில்,நாளாந்தம் அடையாளம் காணப்படும் கோவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களில் 40 முதல் 50 ஆக அதிகரித்துள்ளது.*

*கோவிட்-19 நோயாளர்களை அடையாளம் காண நாளாந்தம் சுமார் 1,000 பரிசோதனைகள் நடத்தப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.*

*அண்மைய நாட்களில் கண்டறியப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ள அதேவேளை, சில நாட்களுக்கு ஒருமுறை நாட்டில் கோவிட் -19 தொடர்பான மரணங்களை அதிகாரிகள் உறுதிப்படுத்துவதாக சங்கத்தின் செயலாளரான வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார். (அ)*

# இலங்கையில் இருக்கும் இந்தியர்கள் அவதானம்

## தூதரகம் எச்சரிக்கை

*கொழும்பு, ஜூலை 21*

*இலங்கையில் உள்ள இந்திய பிரஜைகள் அண்மைய நிலைமை குறித்து எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியுள்ள அதே வேளை, தமது நகர்வுகள் மற்றும் நடவடிக்கைகளை திட்டமிடுமாறும் இலங்கைக்கான இந்திய தூதரகம் கோரிக்கை விடுத்துள்ளது.*

*தேவைப்படும் சந்தர்ப்பங்களில் தூதரகத்தை தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*கொழும்புக்கு அருகில் கடந்த திங்கள் இரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இந்தியப் பிரஜையும் இந்திய விஸா நிலையப் பணிப்பாளருமான விவேக் வர்மா படுகாயமடைந்தார். இவ்வாறான நிலையிலேயே இலங்கையில் உள்ள இந்தியப் பிரஜைகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறுவுறுத்தப்பட்டுள்ளது.*

*இதேவேளை, தாக்குதலில் படுகாயமடைந்த விவேக் வர்மாவை இந்திய தூதரக அதிகாரிகள் நேற்றுமுன்தினம் காலை சந்தித்தனர். இந்தத் தாக்குதுல் குறித்து இலங்கை அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது எனவும் இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)*

# அரசியல் கலாசாரத்தை மாற்ற ஒன்றிணைவோம்

## டலஸ் அழகப்பெரும கோரிக்கை

கொழும்பு, ஜூலை 21

**இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் தருணம் வந்துவிட்டதாகவும், இனியும் பிரிந்து செயற்படாமல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்றும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக களமிறங்கிய, டலஸ் அழகப்பெரும கேட்டுக்கொண்டார்.**

வாக்கெடுப்புக்குப் பின்னர் ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது எமக்கான தோல்வியாக இருந்தாலும், நாம் அனைவரும் இந்தத் தருணத்தில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் இதுவரை பிரிந்து செயற்பட்ட கட்சிகள் அனைத்தும், இந்தத் தேர்தலை



முன்னிட்டு ஒன்றிணைந்து செயற்பட்டதை நாம் அவதானித்தோம்.

சுதந்திரத்துக்குப் பின்னரான, கடுமையான கால கட்டத்தில் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

பாராளுமன்றில் உள்ள 225 உறுப்பினர்களின் குடும்பங்களை மட்டும் பாராது, இதற்கு வெளியே உள்ள 58 இலட்சம் குடும்பங்கள் தொடர்பாக நாம் சிந்திக்கவேண்டும். நாம் இங்கு ஐக்கியமாக செயற்பட்டால் மட்டுமே, மக்களும் ஒன்றாக எமக்கான ஆதரவை வழங்குவார்கள்.

மக்களிடம் இழந்துள்ள அரசியல் விஸ்வாசத்தை மீண்டும் கட்டியெழுப்பவேண்டும்.- என்றார். (அ)

# 11,219 ரூபாவில் ஒருவர் ஒரு மாதம் சீவிக்கலாம்

## புள்ளிவிபரத் திணைக்களம் கூறுகிறது

கொழும்பு, ஜூலை 21

தனி நபர் ஒருவர் 11 ஆயிரத்து 219 ரூபா பணத்தில் ஒரு மாதம் ஜீவிக்கலாம் எனதொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மாவட்டங்களுக்கு அமைய தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இந்த ஆண்டின் மே மாதத்திற்காக வெளியிட்டுள்ள தேசிய வறுமை வரையறை விபரங்கள் மற்றும் தகவல்கள் தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நான்கு பேரை கொண்ட ஒரு குடும்பத்திற்கு அடிப்படை தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மாதம் 44 ஆயிரத்து 876 ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

2012 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய தேசிய மட்டத்தில் ஒரு நபருக்கு 5 ஆயிரத்து 223 ரூபா தேவைப்பட்டது என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆண்டுகளில் கொழும்பு மாவட்டத்தில் வாழும் ஒரு நபருக்கு மாதம் 5 ஆயிரத்து 429 ரூபா தேவைப்பட்டது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. (அ)

# ரணிலுக்கு நாமல் வாழ்த்து

கொழும்பு, ஜூலை 21

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 8ஆவது நிறைவேற்று ஜனாதிபதிக்கு வாழ்த்துகள் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, ரணில் விக்ரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றிருந்தது.

ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்க, டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில் அதிகளவான வாக்குகள் பெற்றதையடுத்து ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க அறிவிக்கப்பட்டார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் நாமல் வாழ்த்து தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி மாளிகையில் இருந்து பஸில் எவ்வாறு வெளியேறினார்?

கொழும்பு, ஜூலை 21

கடந்த ஜூலை 09 ஆம் திகதி கோட்டை ஜனாதிபதி மாளிகையை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்ட போது முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் ஜனாதிபதி மாளிகையின் அறை ஒன்றில் இருந்ததாக உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைவதற்காக ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்திய பாதுகாப்பு வேலியை உடைக்க முற்பட்ட வேளையில் வெளிவிவகார அமைச்சின் திசையிலிருந்து பஸில் ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறிய தாகத் தெரியவந்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்பே அவர் அங்கிருந்து சென்றுள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரும் முப்படைத் தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் ஜனாதிபதி மாளிகையின் செயற்பாட்டு அறையில் இறுதித் தருணம் வரை பாதுகாப்புப் படையினரை வழிநடத்தியிருந்தனர்.

ஜனாதிபதி மாளிகையின் இரண்டாவது மாடியில் இருந்து லிப்ட் மூலம் கடற்படைத் தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஜனாதிபதி, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதன்னவின் தலைமையில் ரணபாகு கப்பலில் திருகோணமலை துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (அ)

# மனித கடத்தல் பட்டியலில் 2 ஆம் இடத்தில் இலங்கை!

கொழும்பு, ஜூலை 21

அமெரிக்காவினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த மனித கடத்தல் அறிக்கையில் இலங்கை 2 ஆம் நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் ஆட்கடத்தலை ஒழிப்பதற்கான குறைந்தபட்ச தரங்களை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை. ஆனால் அதற்கான குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அமெரிக்காவின் அறிக்கை கூறுகிறது.

இலங்கை அரசாங்கம் குறைவான ஆட்கடத்தல் வழக்குகளையே தாக்கல் செய்ததாகவும், மேலும் கடத்தல்காரர்களுக்கான தண்டனைகள் போதுமானதாக இல்லை என்றும் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் உள்ளூர் அதிகாரிகளின் திறன் குறைவாகவே இருந்தது என்றும் அமெரிக்காவின் அறிக்கை கூறுகிறது. (அ)

# கோட்டாபய தலைமையிலான அரசு மக்களுக்கு உண்மையை கூறவில்லை

## ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 21

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பான உண்மைகளை கடந்த அரசாங்கம் மூடி மறைத்துள்ளதாக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சி.என்.என். தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

நான் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுகிறேன். நான் முந்தைய ஆட்சியாளர்களைப் போல் இல்லை என்பது மக்களுக்குத் தெரியும். நான் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கு வந்துள்ளேன் என அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை தற்போது ஒரு திவாலான நாடாக உள்ளது,



அது இப்போது செய்யவேண்டியது சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்ல வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மக்களுக்கு உண்மையைக் கூறவில்லை. மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நாங்கள் பின்னோக்கி சென்றுள்ளோம். இதை கடக்க வேண்டும். எங்களுக்கு 5 அல்லது 10 ஆண்டுகள் தேவையில்லை. அடுத்த ஆண்டு இறுதிக்குள், நாங்கள் நிலைபெறத் தொடங்குவோம். 2024 ஆம் ஆண்டுக்குள், வளர்ச்சி தொடங்கும் பொருளாதாரம் செயல்படும்-என்றார்.

மேலும், இலங்கையில் இருந்து மாலைதீவுக்கு தப்பிச் சென்ற கோட்டாபய ராஜபக்ஷ விடம் பேசியதாகவும், அவர் சிங்கப்பூர் சென்றதாகவும், அவர் இன்னும் சிங்கப்பூரில் இருக்கிறாரா அல்லது வேறு எங்காவது இருக்கிறாரா என்பது அவருக்குத் தெரியாது என்றும் ரணில் விக்கிரமசிங்க இங்கு தெரிவித்துள்ளார்.

ஏன் ஜனாதிபதியாக ஆசைப்படுகிறீர்கள்? என எழுப்பப்பட்ட கேள்விக்கு, நாட்டுக்கு இவ்வாறு நடப்பதற்கோ மற்றவர்கள் கஷ்டப்படுவதற்கோ நான் விரும்பவில்லை என அவர் பதிலளித்தார். (அ)

# இடைக்கால அரசில் அக்கறை காட்டுங்கள்

## அனுரகுமார கோரிக்கை

கொழும்பு, ஜூலை 21

ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தனிநபரைப் பொருட்படுத்தாமல், இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அனுரகுமார திஸாநாயக்க, பத்து பேருக்கு மிகாமல் அமைச்சரவை நியமிக்கப்படவேண்டும் என தெரிவித்தார்.

தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு மத்தியில் பொதுமக்களின் பல எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.



அத்தோடு பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் தேவையில்லை என்றும் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு குறைந்தபட்ச அமைச்சர்களை நியமிக்கவேண்டும் என்றும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும்போது அதன் பதவிக்காலம் ஆரம்பமே அறிவிக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டார். (அ)

# பொது தேர்தலொன்றுக்கு உடனே செல்ல வேண்டும்

## அநுரகுமார திஸநாயக்க வலியுறுத்து



**கொழும்பு, ஜூலை 21**

**நாட்டில் மிக விரைவாக பொதுத் தேர்தலொன்றை நடத்த வேண்டும் என்று ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கிய, ஜே.வி.பியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

வாக்கெடுப்புக்குப் பின்னர் ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகவும் பிரதமராகவும், எதிர்க்கால அரசியல் ஆசையில்லாத ஒருவரை நியமிக்குமாறு கோரினோம்.

இதன்போது பிரதமர் பதவிக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம், இந்த இரண்டு பதவிகளுக்கும் பெண்கள் இருவரை நியமிக்குமாறு கோரியிருந்தார்.

அவ்வாறு ஒரு அரசாங்கம் அமையுமானால் நாம் அரசாங்கத்துடன் இணைந்து, அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொள்ளத் தயாராகவே உள்ளோம் என நாம் அறிவித்திருந்தோம்.

இன்று நாடு பாரிய நெருக்கடிக்குள் உள்ளது. மக்கள் வரிசையில் காத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உரம் இல்லை. மீனவர்கள் படகை எடுத்து கடலுக்குச் செல்ல முடியாத நிலையில் உள்ளார்கள். குழந்தைகளுக்கு பால் மா இல்லை.

இவ்வாறான நிலையில், உடனடியாக பொதுத் தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும் என்றும் நாம் தெரிவித்திருந்தோம்.

ஏனெனில், தற்போதுள்ள இந்த பாராளுமன்றமானது மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட ஒன்றாகும். இவர்களால் நாட்டை நீண்ட நாட்களுக்கு ஆட்சி செய்ய எந்தவொரு தகுதியும் கிடையாது.

எனவே, மிக விரைவாக தேர்தலொன்றுக்கு செல்ல வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)



# எரிபொருள் கோரி அரச அதிபருடன் யாழ்.வணிகர் கழகத்தினர் சந்திப்பு

*யாழ்ப்பாணம், ஜூலை 21*

யாழ்ப்பாண வணிகர் கழகத்தினருக்கும் யாழ். மாவட்ட செயலாளருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி தொடர்பாகவும் அதனை பெற்றுக்கொள்கின்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் நாட்களில் எரிபொருள் விலை குறைக்கப்படுகின்றபோது பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் தற்போது குறைக்கப்பட்ட எரிபொருளின் விலை மிகவும் சொற்பம் எனவும் இதனை வைத்துக் கொண்டு பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது எனவும் எரிபொருளின் விலையை 100 ரூபாயிலிருந்து வரை குறைக்க வேண்டும் என்றும் வணிகர் கழகத்தின் தலைவர் த.ஜெயசேகரம் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர்-

எரிபொருட்களின் விலை மேலும் குறைக்கப்படும் பட்சத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் விலையினை குறைப்பதற்கும் அது தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டது-என்றார். (அ)

# பண்டாரநாயக்க சிலை முன்பாக மக்கள் ஒன்று கூடுவதற்குத் தடை

கொழும்பு, ஜூலை 21

காலி முகத்திடலில் பண்டாரநாயக்க சிலை அமைந்துள்ள இடத்தில் இருந்து 50 மீற்றர் பகுதிக்குள் எந்தவொரு தரப்பினரும் பிரவேசிக்கக்கூடாது என கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த சிலையை சேதப்படுத்தும் திட்டம் இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக கோட்டை பொலிஸார் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவர்களின் கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

எனவே சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் பகுதிக்குள் எந்தவொரு தரப்பினரும் நுழைய முடியாதவாறு உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து இந்த உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# மே 9 வன்முறைகள்: மேலும் 4 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 21

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,225 ஆக அதிகரித்துள்ளது.

1,177 பேர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

858 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# புதிய ஜனாதிபதியின் தெரிவு ஜனநாயகத்துக்கான வெற்றி

## அசாத் சாலி கூறுகிறார்



கொழும்பு, ஜூலை. 21

நாட்டின் எட்டாவது நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்கவை பாராளுமன்றம் தெரிந்திருப்பது ஜனநாயகத்துக்கு கிடைத்த பெரும் வெற்றியென தேசிய ஐக்கிய முன்னணி தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை வாழ்த்தி, அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

முதிர்ந்த அரசியல் அனுபவமுள்ள புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல பாதைகளை கடந்து வந்தவர். அரசியலில் எத்தனை சவால்களை எதிர்கொள்ள நேர்ந்த போதும், ஒருநாளும் அவர் ஜனநாயகத்தை விட்டுக் கொடுத்ததில்லை. முக்கியமான காலகட்டத்தில் பல தியாகங்கள் செய்து நாட்டையும், மக்களையும் பாதுகாத்த பெருமை அவருக்குண்டு. மட்டுமல்ல நெருக்கடியான நேரங்களில்கூட துணிந்து நின்று பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட அவரது முன்னுதாரணம், அரசியல் முதிர்ச்சியையே காட்டுகிறது.

வாதத்திறமையும், வாக்குறுதி மீறாத நேர்மையும்தான் அவரை இந்தளவு உயர்த்தியிருக்கிறது.

சர்வதேசத்தில் அவருக்குள்ள செல்வாக்கினால் நமது நாட்டு நெருக்கடிகளை தீர்ப்பதற்கான வியூகங்களை வகுப்பார் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, பாராளுமன்றத்துக்கும் உள்ளது. இந்த நம்பிக்கை தான் அவரை இன்றைய வாக்கெடுப்பில் வெற்றியீட்ட வைத்துள்ளது.

வெற்றிகையோடு சகல கட்சிகளையும் ஒத்துழைக்குமாறு புதிய ஜனாதிபதி அழைத்திருப்பது ஜனநாயகவாதிக்குள்ள பண்பையே எடுத்துக்காட்டுகிறது.

எனவே, இனியாவது அரசியல் பேதங்களை மறந்து, நமது நாட்டு நெருக்கடியை தீர்க்க சகலரும் புதிய ஜனாதிபதியுடன் கைகோர்க்க வேண்டும்-என்றார். (அ)

# எம்.பி. பதவியை இன்று துறக்கிறார் தம்மிக்க?

கொழும்பு, ஜூலை 21

பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று அவர் இவ்வாறு தனது பதவி விலகலை அறிவிக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியதை அடுத்து வெற்றிடமாகிய பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தம்மிக்க பெரேரா கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நுழைந்தார்.

பின்னர், ஜூன் 24ஆம் திகதி முதலீட்டு மேம்பாட்டு அமைச்சராகப் பதவியேற்ற அவர், ஜூலை 10ஆம் திகதி அமைச்சுப் பதவியில் இருந்து விலகினார்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்றிருந்த நிலையில் அதில் ரணில் விக்ரமசிங்க வெற்றியீட்டி இலங்கையின் அடுத்த ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன், எட்டாவது நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேர்தலில் தம்மிக்க பெரேராவும் வாக்களித்திருந்தார்.


இதற்கு முன்னர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவி வகித்திருந்த சமயம் அவரைப் பதவியில் இருந்து விலக்க வேண்டும் என தம்மிக்க பெரேரா தெரிவித்திருந்தார்.

அத்துடன் தம்மிக்க பெரேரா வகித்த அமைச்சுப் பதவியில் இருந்து விலகியவுடன், அந்த அமைச்சுப் பொறுப்புக்களை ரணில் விக்கிரமசிங்க தனக்கு கீழ் கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு



# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் பொருளாதார ஜனரஞ்சகவாதத்தின் கேடுகளும்



பேராசிரியர்
ஜயதேவ உயன்கொட

இலங்கையின் கொந்தளிக்கும் அரசியல் நெருக்கடிக்கான மூலகாரணம் அண்மைய நிதி நெருக்கடியினால் மோசமடையச் செய்யப்பட்ட பொருளாதார நெருக்கடியாகும். நாட்டின் வெளி நாட்டுச் செலாவணி முற்றாக குறைந்து போனதுடன் வெளிநாட்டு கடன்களை இவ்வருடம் திருப்பிச்செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இலங்கை தெற்காசியாவில் பழைமையான தாராளமய பொருளாதார நாடுகளில் ஒன்றாகும். வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு கிராக்கியை ஏற்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தும் கொள்கையினால் ( Policy ideology of import - substitution industrialisation ) வழிநடத்தப்பட்ட ஒரு இரு தசாப்தகால அரச பொருளாதாரத்தின் ( State - capitalist economy) முடிவுக்குப் பிறகு பொருளாதார தாராளமயமாக்கல் (Economic liberalization) 1977 -78 ஆண்டுகளில் தொடங்கியது. உள்நாட்டு உற்பத்திகளுக்கு கிராக்கியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட வெளிநாட்டு உற்பத்திகள் மீதான தடைக் கொள்கை முன்னேற்றம் காண முடியாத ஒரு முடிவை அடைந்த போது தாராளமயமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் உற்பத்தி கைத்தொழில் துறையின் துரித விரிவாக்கம் ஆகியவற்றினால் உந்தப்படும் ஏற்றுமதியை மையமாகக் கொண்ட கைத்தொழில் மயமாக்கத்தின் ஊடாக தாராளமயமாக்கல் துரித பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 1983 ஆம் ஆண்டில் தொடங்கிய உள்நாட்டுப் போர் ஏற்றுமதியை மையமாகக்கொண்ட பொருளாதார வளர்ச்சியில் ஏற்படக்கூடிய எந்தவொரு முன்னேற்றத்தையும் பின்தள்ளியது.

மேலும் சந்தையை தாராளமயமாக்குவதன் மூலமாக ஏற்றுமதியை மையமாகக்கொண்ட வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு 1978 ஆம் ஆண்டுக்கு பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட தொடர்ச்சியான பல்வேறு பெரும்பாக பொருளாதார சீர்திருத்தங்கள் இலங்கைப் பொருளாதாரத்தை மேலும் உலகப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைத்தது. அவ்வாறிருந்த போதிலும், தொடர்ந்து கொண்டிருந்த சமூக மற்றும் அரசியல் அமைதியின்மையும் உள்நாட்டுப் போரும் அரசியல் வன்முறைகளும் காரணமாக ஒரு சராசரியான பொருளாதார வளர்ச்சியையே உறுதிப்படுத்தக்கூடியதாக இருந்தது.

இலங்கை 1950களில் இருந்து சென்மதி நிலுவை (Balance of payment ) சிக்கல்களை கொண்டிருந்தது. வெளிநாட்டு உற்பத்திகளின் இறக்குமதியை தடைசெய்து உள்நாட்டு உற்பத்திகளுக்கு கிராக்கியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சி தந்திரோபாயம் எதிர்நோக்கிய நெருக்கடியுடன் தற்செயல் நேர்விளைவாக சென்மதி நிலுவை சிக்கல்கள் மேலும் மோசமடைந்தன. சென்மதி நிலுவை நெருக்கடியை தீர்த்துவைப்பதில் பொருளாதார தாராளமயமாக்கல் பெரிதாக பங்களிப்புகளைச் செய்யவில்லை.

பிரதான விவசாய பண்டங்களின் ஏற்றுமதி, சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் அனுப்பீடுகள் ஆகியவை வெளிநாட்டு செலாவணி சம்பாத்தியத்தின் மூன்று பிரதான மூலங்களாக அமையத் தொடங்கின. ஆனால், காலனித்துவ பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் இருந்து நகர்வதற்கு ஏதுவாக ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் பெரிதாக பல்வகை விரிவாக்கம் செய்யப்படவில்லை.1978 - 79 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட நவீன உற்பத்தி துறையில் நவீனமயமாக்கமும் குறிப்பிடத்தக்க அளவு விரிவாக்கமும் செய்யப்படாத அதேவேளை, பொருளாதார தாராளமயமாக்கலில் புதிதாக பிரவேசித்த பங்களாதேஷ் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் முன்னேற்றம் கண்டன.

உற்பத்தி நவீனமயமாக்கம் மற்றும் பதப்படுத்தல் என்று வரும்போது பெருந்தோட்டத்துறை, விவசாயம் மற்றும் கடற்தொழில் துறையில் தொடர்ந்து தேக்கநிலையே காணப்பட்டது. வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களினால் அனுப்பப்பட்ட வெளிநாட்டு செலாவணியில் பெருமளவுக்கு தங்கியிருந்தபோதிலும் நவீன உற்பத்தி துறையில் காணப்பட்ட மந்தநிலையை ஈடு செய்யக்கூடியதாக அது அமையவில்லை.

அதனால்2010 ஆம் ஆண்டுக்கு பிறகு வெளிநாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன்களே வெளிநாட்டு செலாவணிக்கான நான்காவது வளமூலமாக அமைந்தது. அதன் பிற்பாடு பதவிக்கு வந்த சகல அரசாங்கங்களும் வெளிநாட்டு செலாவணி கையிருப்பு நெருக்கடியைச் சமாளிக்க வெளநாடுகளிடமும் சர்வதேச நிதிச்சந்தையிடமும் கடன்படுவதிலேயே நாட்டம் காட்டின.

2009 நடுப்பகுதியில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபோதிலும் கூட , வெளிநாடுகளில் தங்கியிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தின் கட்டமைப்பு போதாமைகளை கையாளுவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாக கடன் நெருக்கடியை கையாளுவதற்கு இலங்கை அரசாங்கத்தினால் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. உற்பத்தித் துறை, விவசாயம், கடற்தொழில் மற்றும் பெருந்தோடங்கள் என்று உள்நாட்டுப் பொருளாதாரத்தின் பயன்தரு துறைகளை துரிதமாக அபிவிருத்தி செய்வதன் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு கட்டமைப்புச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தத் தவறியமையே இறுதியில் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு வழிவகுத்தது.

இலங்கையின் கடன் நெருக்கடி பலவீனமான பொருளாதார ஆளுகை மற்றும் கொள்கை முட்டுக்கட்டைகளினால் மேலும் மோசமாக்கப்பட்டது. நவ தாராளவாத சீர்திருத்தப் பாதை தொடர்பில் கொள்கை வகுக்கும் வட்டாரங்களினால் விமர்சன அடிப்படையிலான மதிப்பீடு செய்யப்படவில்லை. நவ பாணியிலான பொருளாதாரத்தில் மாத்திரம் ( Neo classical economics) பயிற்றுவிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதாரக் கொள்கை வகுக்கும் அதிகாரிகள் வர்க்கம் சர்வதேச நாணய நிதியத்தினாலும் உலக வங்கியினாலும் முன்வைக்கப்படுகின்ற கொள்கைத் தீர்வுகளை எதிர்ப்போ அல்லது மறுசிந்தனையோ இல்லாமல் ஏற்றுக்கொள்வதில் கெட்டபெயர் உடையதாகும்.

ஆளும் கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தை கேட்டுக்கேள்வியின்றி பொருளாதார கொள்கை அதிகாரிகள் வர்க்கம் ஏற்றுக்கொண்டுவிடுகிறது. இந்த ஆளும் கட்சிகள் இறுதியில் பொருளாதார ஜனரஞ்சக ஆட்சியொன்றை ( Regime of economic populism) தோற்றுவித்தன. இந்த ஆட்சி ஜனரஞ்சக அரசியல்வாதிகள் கூட்டணியொன்றினாலும் அடிமைத்தனமான பொருளாதார அதிகாரிகள் வர்க்கத்தினாலும் முன்னெடுக்கப்பட்டது.

இதன் கெடுதியான விளைவுகளை குறிப்பாக ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவின் கீழ் 2019 - 2020 காலகட்டத்தில் காணக்கூடியதாக இருந்தது. அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட உடனடியாக தனக்கு அரசியல் விசுவாசத்தைக் காட்டிய தனவந்த தொழிலதிபர்கள் வர்க்கத்துக்கு பாரிய வரிக்குறைப்புகள் மூலமாக சலுகைகளச் செய்தார். அவரின் அந்த கொள்கைத் தீர்மானம் அரசாங்கத்தின் வரவாய் பாரதூரமானளவுக்கு குறைந்துபோனமைக்கு நேரடியாக காரணமாயிருந்தது என்பது தெரியவந்த பின்னர் மாத்திரமே அதுவும் மிக அண்மையில் அது குறித்து உன்னிப்பாக நோக்கப்பட்டது.





தற்போது இலங்கை பொருளாதார, அரசியல் மற்றும் சமூக மட்டங்களிலான பன்முக நெருக்கடிகளினால் தோற்றுவிக்கப்பட்ட பொறியொன்றில் சிக்கியிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரத்தின் அத்திபாரங்கள் நொருங்கிப் போய்க் கிடக்கின்றன.

பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு பல வருடங்கள் செல்லும். அதேவேளை, பொருளாதார நெருக்கடியினால் தோற்றுவிக்கப்பட்ட பாரிய சமூக நெருக்கடியைக் கையாளுவது வங்குரோத்து அடைந்துவிட்ட ஒரு பொருளாதாரத்தின் மத்தியில் மிகவும் பாரிய ஒரு பணியாக இருக்கப்போகிறது.

(அவுட்லுக் இந்தியா)

# ஈழத்தமிழர்களுக்காக சுதந்திரமான பொது வாக்கெடுப்பிற்கு வழிகோலுமாறு

## ஐக்கிய அமெரிக்க இராஜதந்திரிகளிடம் சிறிதரன் கோரிக்கை!


கடந்த 2022.07.12ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை வோசிங்ரன், டி.சி. ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் மற்றும் அரச சட்டசபை உறுப்பினர்களையும் மாநிலத் திணைக்கள அதிகாரிகளையும் வோசிங்ரன், டி.சி.யில் சந்தித்துக் கலந்துரையாடிய பா.உ. சிவஞானம் சிறிதரன் அவர்கள், இலங்கையின் தற்போதைய அரசியல், பொருளாதார சூழல்பற்றி விளக்கமளித்ததோடு, தமிழர்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கு சுதந்திரமான பொதுவாக்கெடுப்பு ஒன்றே பொருத்தமானது என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதேவேளை, பல்லாயிரக்கணக்கான மக்களின் இறப்பிற்கு வழிவகுத்த 30 ஆண்டுகால இனவிடுதலைப்போர் மௌனிக்கப்பட்டு 12 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில், அப்போருக்கான அடித்தளமாக இருந்த ஈழத்தமிழ் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அமெரிக்காவின் தலைமைத்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். காலம்காலமாக இலங்கை அரசியல் அதிகாரபீடங்களுக்கு வந்த அனைத்து சிங்கள தலைமைத்துவங்களும் தமது அரசியல் கட்சிகள் எவையாயினும், எப்போதுமே தமிழர்களுக்கெதிராகவே செயற்பட்டிருந்ததோடு அவர்களில் ஒரு சிங்களத் தலைவரேனும் தமிழர்களுக்கு முழு உரிமைகளையும் வழங்க முன்வந்திருக்கவில்லை. அதனடிப்படையில் இலங்கையின் தற்போதைய வளர்ச்சி நிலையில், அப்பிராந்தியத்திற்கு அமைதியையும் திடத்தன்மையையும் கொண்டுவரக் கூடியதொரு பொதுவாக்கெடுப்பினை ஜனநாயகரீதியாகவும் அமைதியாகவும் நடாத்துவதன் மூலம், தமிழர்கள் ஒரு பூர்வீக தேசிய இனத்தவர்கள் என்ற அங்கீகாரத்தோடு, வடக்கு, கிழக்குப் பிராந்தியங்கள் தமிழர்களின் மரபுவழித் தாயகம் என்ற அடிப்படையில் ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல்தீர்வைப் பெற்றுத்தருவதற்கு காத்திரமான பங்களிப்பை வழங்குமாறு அமெரிக்காவிடம் அவர் கேட்டுக் கொண்டார். குறித்த கலந்துரையாடலில் தமிழ்த்தேசிய இனத்தின் இருப்புக்காக குரல்கொடுத்துவரும் அமெரிக்காவி லுள்ள புலம்பெயர் தமிழர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மேற்படி கலந்துரையாடலின் போது, ஈழத்தமிழர்களின் நலன்கருதி, அமெரிக்க அரசு கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கையை பா.உ. சிறீதரன் முன்வைத்துள்ளார்:





1948இற்கு முன்பிருந்தே இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்துவரும் ஈழத் தமிழ் மக்களுக்காகவும் அவர்களது வழித்தோன்றல்களுக்காகவும், தமது தாய்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்களிடையே ஜனநாயகரீதியாகவும் அமைதியாகவும் தமது சுதந்திரத்தினைத் தீர்மானிப்பதற்காக, சர்வதேச சமூகத்தினால் கண்காணிக்கப்படும் சுதந்திரமான பொது வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிறுத்தி இனப்படுகொலை, மனித குலத்திற்கெதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், பகைமை மற்றும் பிரிவினைவாதக் குற்றங்களுக்கெதிராக விசாரணைசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு, இனப்படுகொலைக் குற்றத் தடுப்பு மற்றும் தண்டனைக்கான தீர்மானத்தின் கீழும் சித்திரவதைக்கெதிரான தீர்மானத்தின்கீழும் பகைமை மற்றும் பிரிவினைவாதக் குற்றங்களின்கீழும் சர்வதேச நீதிக்கான நீதிமன்றத்தின் முன்னால் இலங்கையை நிறுத்தி அதற்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது.

இப்பொதுவாக்கெடுப்பு நடாத்தப்படும்வரையில் நாட்டின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்திலுள்ள ஈழத்தமிழர்களை ஆட்சிசெய்யவும் அவர்களையும் அவர்களது நிலங்களையும் பாதுகாப்பதற்குமாக ஓர் இடைக்கால சர்வதேசப் பாதுகாப்புப் பொறிமுறையினை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பாரிஸ் கிளப், ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமிருந்து இலங்கை பொருளாதார உதவியினை கோரும் வேளையில், நிபந்தனைகளற்று எந்தவொரு உதவியும் வழங்கப்படக்கூடாதென தமிழர்கள் வலியுறுத்துகின்றனர். ஐ.நா. மற்றும் ருஹேசுஊ உள்ளிட்ட சர்வதேச சமூகத்திற்கான இலங்கையின் முதன்மையான பொறுப்புக்களையும் இலங்கையின் ஏமாற்று வடிவங்களையும் சர்வதேச சமூகமானது விளங்கிக்கொள்ள வேண்டும். இலங்கைக்கான உதவிகள் எவையேனும் வழங்கப்படும்போது பின்வரும் நிபந்தனைகளை விதிக்கப்பட வேண்டும்:

அ. இலங்கையானது நிறைவேற்றப்படாத அனைத்து UNHRC தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தவேண்டும்.

ஆ. மீண்டும் இடம்பெறாதென்ற உத்தரவாதமாக, இலங்கை, ரோமானிய சட்டத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு இனவிடுதலைப்போரின் போது தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் குற்றங்களுக்குமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்படுவதற்கும் சம்மதிக்கவேண்டும்.


இ. தமிழர் பிராந்தியத்திலிருந்து இலங்கை இராணுவத்தினை அகற்றுதல் மற்றும் போருக்கு முன்னர் 1983 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்த இலங்கை இராணுவத்தின் அளவிற்கு இராணுவப் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது.

ஈ. இடைக்கால சர்வதேசப் பாதுகாப்புப் பொறிமுறையினையும் ஈழத்தமிழர்களுக்காக சுதந்திரமான பொதுவாக்கெடுப்பினையும் ஏற்றுக்கொள்வது.

என்பவை உள்ளிட்ட பல முக்கியவிடயங்கள் மேற்படி கலந்துரையாடலின் போது, பா.உ சிவஞானம் சிறீதரன் அவர்களால் அமெரிக்க இராஜதந்திர குழுவினருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. •


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........  ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) [ 3, 9, 14, 6, 10, 12, ] பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

....................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..............................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...............................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

...................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



...................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

...................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6  2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130  2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455
24. 1l 100ml / 1100ml
25. ரூபாய் 144.00
26. 1) 190  2) 100  3) 290
27. 15 : 30
28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1
31. 2
32. 3
33. 2
34. 3
35. 2

### கல்வி tv CHANNEL-1 — 21.07.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 21.07.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கல்முனையில் அரசியல் தலையீடு காரணமாக சமையல் எரிவாயு வழங்குவதில் முறைகேடுகள்!

அம்பாறை, ஜூலை. 21

**கல்முனை மாநகரில் சமையல் எரிவாயு விநியோகத்தில் அரசியல் தலையீடுகள் இருப்பதனால் முறைகேடுகள் இடம்பெறுவதுடன் மக்கள் பிரதிநிதிகள் தலையிட்டு அவர்களின் ஆதரவாளர்களுக்கு மற்றும் குடும்பத்தினருக்கு வழங்கி வருகின்றனர். இதனால் தேவையுடைய மக்களாகிய எங்களுக்கு கிடைப்பதில் இடர்பாடுகள் இருக்கிறது என பொதுமக்கள் தெரிவித்தனர்.**

*கல்முனை மாநகர பிரதேசங்களில் பிரதேச செயலகத்தையும் தாண்டி கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் பலர் தலையிட்டு சமையல் எரிபொருளுக்கான ரோக்கன்களை வழங்கி அவர்களுக்கு சமையல் எரிவாயுவை பெற்றுக்கொடுக்கின்றனர். இந்த வாய்ப்பானது அவர்கள் கட்சி சார்ந்தவர்களுக்கு மட்டுமே கிடைக்கின்றது. அதிலும் சிலர் தனது நெருங்கிய குடும்பத்தினர், தீவிர ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை வழங்கி பங்கிடுவதனால் பொதுமக்களுக்கு சமையல் எரிவாயு கிடைப்பதில் சிக்கல்கள் நிலவுகின்றன.*

*இந்த விடயம் தொடர்பில் கல்முனை பிரதேச செயலாளர் அரசியல்வாதிகளின் பின்னால் செல்லாமல் பொறுப்புவாய்ந்த அரச*




*அதிகாரியாக செயற்பட்டு தேவையுடைய மக்களுக்கு கிராம நிலைதாரிகள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோர்களை பயன்படுத்தி ஒழுங்கான முறையில் சகலருக் கும் கிடைக்கும் வண்ணம் சமைஷயல் எரிவாயுவை பெற்றுக் கொடுக்க ஆவன செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.*

*(அ)*

## இயற்கைப் பசளை உற்பத்தியை ஊக்கப்படுத்த இயந்திர தொகுதி



*அம்பாறை, ஜூலை. 21*

*இயற்கை பசளை உற்பத்தியை ஊக்கப்படுத்தும் நோக்கில் பெரன்டினா நிறுவனத்தால் கல்முனையில் இயந்திர தொகுதிகள் வழங்கப்பட்டன.*

*இந்த நிகழ்வு கல்முனை உப பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ் கலந்து கொண்டார்.*

*மூன்று இலட்சம் ரூபா பெறு மதியான குறித்த இயந்திர தொகுதியின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற இயற்கை பசளையை சந்தைப் படுத்தும் செயற்பாடும் குறித்த நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*இந்நிகழ்வில் விவசாய பாடவிதான அலுவலகர் எம். எஸ்.எம் ஜெனித்கான் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் பி.பிரதிலிபன், வியாபார அவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெயரூபன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.*

*(அ)*

## முன்னாள் பிரதம பொலிஸ் அதிகாரிக்கு விளக்கமறியல்

*அம்பாறை, ஜூலை. 21*

*எரிபொருளை நிரப்புவதற்காக பொலிஸ் சீருடையில் வருகை தந்த முன்னாள் பிரதம பொலிஸ் அதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.*

*கடந்த 18 ஆம் திகதி மாலை அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் உள்ள எரிபொருள் நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகை தந்த நிலையில் இவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.*

*நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்ட நிலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை சந்தேக நபரான முன்னாள் பிரதம பொலிஸ் அதிகாரியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.*

*குறித்த சந்தேக நபர் அண்மையில் மட்டக்களப்புப் பகுதியில் வங்கி ஒன்றில் இடம்பெற்ற கொள்ளை ஒன்றில் சந்தேக நபராக இனங்காணப் பட்ட நிலையில் பொலிஸ் சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார்.*

*இந்நிலையில கல்முனை பாண்டிருப்பு பகுதியை சேர்ந்த 56 வயதான சந்தேக நபரான இவர் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் பொலிஸ் சீருடை தரித்து வருகை தந்து பல தடவை எரிபொருளை நிரப்பிச் சென்ற நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் கைதாகினார்.*

*குறித்த முன்னாள் பொலிஸ் அதிகாரி மீது அரச ஊழியர் போன்று நடமாடியமை, சட்டவிரோதமாக பொலிஸ் சீருடையை அணிந்து நேர்மையீனமாக செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*குறித்த சந்தேக நபர் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்ட போதிலும் எவ்வாறு சீரூடைகளை பெற்று எவ்வாறு செயற்பட்டார் என்பது தொடர்பில் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.*

*(அ)*

## பெற்றோல் கறுப்பு சந்தையை ஒழிப்பது தொடர்பில் ஆராய்வு

*கொழும்பு, ஜூலை. 21*

*பெற்றோல் விநியோகத்தில் கறுப்புச் சந்தை மற்றும் முறைகேடுகளை இல்லாதொழிப்பது சம்பந்தமான கலந்துரையாடல், சாய்ந்தமருது பிரதேச செயலக ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.*

*இதில் நடைமுறைச் சாத்தியமான பல முடிவுகள் நீண்ட நேர கலந்துரையாடலின் பின்னர் எடுக்கப்பட்டதுடன், முடியுமான அளவு கறுப்புச் சந்தையை குறைப்பதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.*

*அரசாங்கத்தால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள தேசிய எரிபொருள் விநியோக செயற்றிட்டம் நடைமுறைக்கு வரும் வரை சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் அறிமுகப்படுத் தப்பட்ட செயலி நடைமுறையில் இருக்குமென சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் இதன்போது தெரிவித்தார்.*

*இந்தக் கலந்துரையாடலில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.எம். சம்சுதீன், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள், சாய்ந்தமருது லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் நிலைய நடத்துநர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தால் அறிமுகம் செய்யப்பட்ட செயலியை செயல்படுத்தும் உத்தியோகத் தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.*

*(அ)*

# மட்டு. ஆரையம்பதியில் தங்கம் தேடி நிலத்தைத் தோண்டிய 4 பேர் கைது!


*மட்டக்களப்பு, ஜூலை. 21*

*மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி ஒல்லிக்குளம் பிரதேசத்தில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் தங்கம் தேடி நிலத்தை தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட 4 பேரை நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு களுவாஞ்சிக்குடி விசேடஅதிரடிப்படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.*

*இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய சம்பவதினமான நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் குறித்த பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலை தங்கு விடுதிக்கு அருகாமையிலுள்ள கைவிடப் பட்ட காணி ஒன்றைக் களு வாஞ்சிக் குடி விசேட அதிரடிப் படையினருடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இணைந்து சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.*

*இதன்போது அங்கு நிலத்தில் தங்கம் இருப்பதாக நிலத்தை தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் ஆரையம்பதி பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் உட்பட 4 பேரை கைது செய்ததுடன் நிலத்தை தோண்ட பயன்படுத்திய மண்வெட்டி, அலவாங்கு, சவள் போன்ற ஆயுதங்களை மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.*

*இதில் கைது செய்யப்பட்டவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(அ)*



# சூரிய புயல் எச்சரிக்கை

நியூயோர்க், ஜூலை. 21

சூரிய புயல் பூமியை தாக்கு வதற்கான வாய்ப்புகள் உள்ள தாக நாஸா விஞ்ஞானிகள் எச்ச ரித்துள்ளனர்.

சூரிய புயல்களை பூமியின் காந்தபுலம் ஓரளவு தடுத்தாலும் சிறிய அளவிலான பாதிப்புகள் ஏற்படுகின்றன. கடந்த சில நாட்களாக பூமியின் வளிமண் டலத்தை சக்திவாய்ந்த சூரிய புயல் தாக்க உள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் எச்சரித்து வருகின்றனர். இந்நிலையில் வீரியமிக்க சூரிய புயல் பூமியை தாக்க வாய்ப்புள்ளதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ள னர்.

சூரிய புயல் தாக்கத்தால் செயற்கைக்கோள்கள் செயல் பாடுகள் பாதிக்கும் என்பதால் ஜி.பி.எஸ் உள்ளிட்ட தொலை தொடர்பு சேவைகள் பல இடங்களில் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக கூறப்பட் டுள்ளது. (அ)

# எலான் மஸ்கிற்கு நெருக்கடி

நியூயோர்க், ஜூலை. 21



உலகில் முதல்நிலை பணக்காரர் எலான் மஸ் கிற்கு எதிராக டுவிட்டர் நிறுவனம் தொடர்ந்த வழக்கில் ஒக்ரோபர் மாதம் விசாரணை நடை பெறும் என அமெரிக்கா வின் டெலவர் நீதிமன் றம் தெரிவித்துள்ளது.

44 பில்லியன் டொலர் கொடுத்து ட்விட்டரை வாங்கும் ஒப்பந்தத்தில் இருந்து விலகிய எலான் மஸ்க் மீது, டுவிட்டர் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது.

அமெரிக்காவின் டெலவர் நீதிமன்றத்தில் டுவிட்டர் நிறுவனம் தாக்கல் செய்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், ஒக்ரோபரில் வழக்கு தொடர்பாக டுவிட்டர் மற்றும் எலான் மஸ்கிடம் விசாரணை நடத்தப்படும் என தெரிவித்துள்ளனர். (அ)

# ஈரானுடன் நல்லுறவை விரும்புகின்றது ரஷ்யா

## அலி கமேனி - புடின் நேரடிப் பேச்சு

தெஹ்ரான், ஜூலை. 21

அரசுமுறைப் பயணமாக நேற்று முன் தினம் ஈரான் விஜ யம் செய்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அங்கு ஈரான் அரச தலைவர் அய துல்லா அலி கமேனியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.



அத்துடன், துருக்கி ஜனாதி பதி தையிப் எர்டோகனையும் தெஹ்ரானில் சந்தித்து புடின் பேசினார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு பின்னர் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளுக்கு வெளியே உள்ள நாடுகளின் தலைவர்களுடன் புடின் மேற்கொண்ட முதல் நேரடிச் சந்திப்புகளாக இவை அமைந்தன.

துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகனுடனான சந்திப்பின் போது உக்ரைனின் கருங்கடல் தானிய ஏற்றுமதியை மீண்டும் தொடங்கும் ஒப்பந்தம் மற்றும் வடக்கு சிரியாவில் தொடரும் மோதல் குறித்து விவாதிக்கப் பட்டதாக தெரியவருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேல் மற்றும் சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்த சில நாட்களுக்குப் பின் னர் புடின் ஈரானுக்கு மேற் கொண்ட விஜயம் முக்கியத்து வம் வாய்ந்ததாகக் கருதப்படு கிறது.

ரஷ்யா மீதான மேற்கத்திய பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டு ஈரான், சீனா மற் றும் இந்தியாவுடன் நெருக்க மான மூலோபாய உறவுகளை உருவாக்கும் மொஸ்கோவின் திட்டங்களைப் பற்றிய வலு வான செய்தியை இந்தப் பய ணம் மேற்கு நாடுகளுக்கு அனுப்புகிறது.

புடின் விஜயத்தின்போது ஈரானுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே நீண்ட கால ஒத்து ழைப்புக்கு ஈரான் தலைவர் அயதுல்லா அலி காமேனி அழைப்பு விடுத்தார்.

ரஷ்யாவும் ஈரானும் மேற்கத் திய நாடுகளின் ஏமாற்று சுதந் திரத்துக்கு எதிராக விழிப்புடன் இருக்கவேண்டும் என புடினி டம் அயதுல்லா அலி கமேனி கூறினார் என ஈரானின் அரச தொலைக்காட்சி தெரிவித்துள் ளது.

அமெரிக்காவிடமிருந்து ரஷ்யா தன் சுதந்திரத்தை பேணுவதை புடின் உறுதி செய் துள்ளதாகவும், பொருட்களை வர்த்தகம் செய்யும் போது நாடுகள் தங்கள் சொந்த நாட்டு நாணயங்களைப் பயன்படுத்தத் தொடங்க வேண்டும் என்றும் கமேனி கூறினார்.

அமெரிக்க டொலர் படிப் படியாக உலகளாவிய வர்த்தகத் திலிருந்து அகற்றப்பட வேண் டும், இது படிப்படியாகச் செய் யப்படலாம் என்று கமேனி தெரிவித்தார்.

போரில் சாதாரண மக்கள் துன்பங்களை அனுபவித்து வருகின்றபோதும், உக்ரைன் விவகாரத்தில் மொஸ்கோவுக்கு மாற்று வழி இல்லை என்று கமேனி தெரிவித்தார்.

இதேவேளை, புடினின் தெஹ்ரான் பயணம், உக்ரைன் மீதான அதன் ஆக்கிரமிப்பை அடுத்து ரஷ்யா எவ்வளவு தனி மைப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. (அ)

# வரலாறு காணாத வெப்பம்!

## சமாளிக்கப் போராடுகிறது இங்கிலாந்து

லண்டன், ஜூலை. 21

ஐரோப்பிய நாடுகள் கடும் வெப்ப அலையு டன் போராடி வரும் நிலையில் இங்கிலாந்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முன்னொருபோதும் இல்லாதளவு 40 பாகை செல்சியஸை கடந்த அதிகபட்ச வெப்பநிலை பதிவானது.

அதிகபட்சமாக மத்திய இங்கிலாந்தில் உள்ள கோனிங்ஸ்பையில் 40.3 பாகை செல்சியஸ் வெப்பநிலை நேற்று முன்தினம் பதிவானது.

2009 ஆம் ஆண்டு பதிவான 38.7 பாகை செல்சியஸ் வெப்பமே இங்கிலாந்தில் பதிவான அதிகபட்ச வெப்பநிலையாக இருந்த நிலையில் நாட்டின் பல இடங்களில் நேற்று முன் தினம் 40 பாகை செல்சியஸுக்கு அதிக வெப்பம் பதிவா னது.

உச்ச வெப்பம் காரணமாக லண்டன் உட்பட நாடு முழுவதும் பல இடங்களில் தீபரவல் ஏற்பட் டது. அத்துடன், ரயில் மற்றும் விமான சேவை களும் பாதிக்கப்பட்டன.

எனது வாழ்க்கையில் இங்கிலாந்தில் இது போன்ற வெப்பநிலையைக் காண்பேன் என்று எதிர்பார்க்கவில்லை என இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட அந்நாட்டு வானிலை அலுவலக அதிகாரி ஸ்டீபன் பெல்ச்சர் தெரிவித்துள்ளார்.

கடும் வெப்பம் காரணமாக லண்டனில் இருந்து நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு கடற் கரை வரையிலான முக்கிய வழித்தடங் களில் ரயில் சேவைகள் நேற்று முன்தினம் ரத்து செய்யப்பட்டன. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

பொதுவாக எப்போதும் பரபரப்பாக இருக்கும் நகர மையங்கள் நேற்று முன்தினம் அமைதியாக இருந்தன.

கடுமையான வெப்பம் காரணமாக ஒரு மணி நேரத்திற்கு 400 அழைப்புகளைக் கையாள்வதாக லண்டன் அம்புலன்ஸ் சேவை தெரிவித்துள்ளது.

கடும் வெப்பம் காரணமாக சுவாசிப்பதில் சிரமம், தலைச்சுற்றல் மற்றும் மயக்கம் போன்ற வற்றால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதை நாங்கள் காண்கி றோம் என லண்டன் அம்புலன்ஸ் நடவடிக்கை களின் பிரதிப் பணிப்பாளர் பீட்டர் ரோட்ஸ் கூறினார்.

கடுமையான வெப்பம் மற்றும் கடும் பனிக் காலங்களில் முக்கிய போக்குவரத்து சேவைகளை பராமரிக்க போராடும் இங்கிலாந்து, முன்னொரு போதும் இல்லாதவாறு வெப்பநிலை அதிகரித்த தால் தேசிய அவசர நிலையை அறிவித்துள்ளது.

இதேவேளை, ஐரோப்பாவின் பெரும் பகுதி கள் கடும் வெப்பத்தைச் சமாளிக்கப் போராடி வருகின்றன.





# உக்ரைனில் உயிரிழந்த மக்களின் எண்ணிக்கை 5,110 ஆக உயர்ந்தது

கீவ், ஜூலை. 21

ரஷ்யா படையெடுத்ததில் இருந்து உக்ரைனில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை 5,110 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 6,752 பேர் காயம் அடைந்துள்ளனர்.

உக்ரைன் மீது இரவு, பகல் பாராமல் ஏவுகணைகள் மற்றும் பீரங்கி குண்டுகளை வீசி தாக்கு தல் நடத்தியதில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு கூறியுள் ளது.

இதனிடையே, உக்ரைன் விமானப்படை தனது முகநூல் பக்கத்தில், ரஷ்யா 3000க்கு மேற்பட்ட ஏவுகணைகளை வீசியுள்ளது என குற்றம் சாட்டி யுள்ளது.

குரூஸ் ஏவுகணைகள், வான் மேற்பரப்பு ஏவுகணைகள், பாலிஸ்டிக் ஏவுகணை அமைப் புகள், பாஸ்டன் கடலோர அமைப்பின் ஓனிக்ஸ் ஏவுகணை கள் உள்ளிட்ட பல்வேறு ஏவு கணைகளை ஏவி தாக்குதல் நடத்தின.

கப்பல் கட்டும் தளம் உள் பட தொழில்துறை கட்டமைப் புகள், பொது உட்கட்டமைப்பு களை குறிவைத்து தொடர்ச்சி யாக ஏவுகணைகள் வீசப்பட் டன என தெரிவித்துள்ளது. (அ)

# இலங்கையுடனான டெஸ்ட் பாகிஸ்தான் அபார வெற்றி!

காலி, ஜுலை 21

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியை கைப்பற்றியது பாகிஸ்தான் அணி. பாகிஸ்தான் அணி இரண்டாவது தடவையாக துடுப்பெடுத்தாடி வெற்றி பெற்ற போட்டிகளில் இரண்டாவது பெரிய இலக்கு போட்டியாக இது அமைந்தது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி காலியில் நடந்தது. நேற்று இறுதி நாள் ஆட்டம் நடந்தது.

அப்துல் ஷபிக் மிகவும் திறமையாக அதேவேளை பொறுப்புணர்வுடன் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 160 ஓட்டங்களைப் பெற்று பாகிஸ்தானின் வெற்றியை உறுதி செய்தார்.

போட்டியில், வெற்றி பெறுவதற்கு கடைசி நாளன்று பாகிஸ்தானுக்கு மேலும் 120 ஓட்டங்கள் தேவைப்பட்டது. அத்துடன் இலங்கைக்கு 7 விக்கெட்களை வீழ்த்த வேண்டியிருந்தது.

நேற்றைய நாள் ஆட்டத்தை பாகிஸ்தான் 2 ஆவது இனிங்ஸில் 3 விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்கள் என்ற வலுவான நிலையிலிருந்து பாகிஸ்தான் தொடர்ந்தது.




அப்புதுல்லா ஷபிக், முஹமட் றிஸ்வான் மிகவும் பொறுப்புணர்வுடன் துடுப்பெடுத்தாடி மொத்த எண்ணிக்கையை 276 ஓட்டங்களாக உயர்த்தினர்

இந்நிலையில், 40 ஓட்டங்ளைப் பெற்றிருந்த றிஸ்வானை எல். பி. டபிள்யு முறையில் பிரபாத் ஜயசூரிய ஆட்டமிழக்கச் செய்தார்.

ஷபிக், றிஸ்வான் ஆகிய இருவரும் 4 ஆவது விக்கெட்டில் பெறுமதிமிக்க 81 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து வந்த அறிமுக வீரர் அகா சல்மானின் விக்கெட்டை ஜயசூரியவும் ஹசன் அலியின் விக்கெட்டை தனஞ்சய டி சில்வாவும் வீழ்த்தி இலங்கைக்கு உற்சாகத்தைக் கொடுத்தனர்.

எவ்வாறாயினும், பாகிஸ்தான் 6 விக்கெட்களை இழந்து 331 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் தடைப்பட்டது.

வெற்றிக்கு 11 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மழையின் பின்னர் ஆட்டம் தொடர்ந்தது. பாகிஸ்தான் அணி 6 விக்கெட்களை இழந்து வெற்றி இலக்கை கடந்து 4 விக்கெட்களால் வெற்றிபெற்றது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்களால் வெற்றிபெற்று 1- 0 என முன்னிலை பெற்றுள்ளது.

முன்னதாக, முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 222 ஓட்டங்களை எடுத்தது. பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 218 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இனிங்ஸில் இலங்கை 337 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத் ஜெயசூரிய 4 விக்கெட்களை கைப்பற்றினார். போட்டியின் நாயகனாக அப்துல்லா சபீக் தெரிவானார். (ஐ)




## இங்கிலாந்துடனான போட்டி; தென்னாபிரிக்கா வெற்றி!

செஸ்டர் லீ ஸ்ட்ரீட், ஜுலை 21

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள், இருபது -20 மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி செஸ்டர் லீ ஸ்ட்ரீட்டில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில், நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி, முதலில் ஆடிய தென்னாபிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 333 ஓட்டங்கள் குவித்தது. வான் டெர் டுசன் சிறப்பாக ஆடி சதமடித்து 133 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். மார்க்ரம் 77 ஓட்டங்களிலும், மலான் 57 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து, 334 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களான ஜசன் றோய், பெயர்ஸ்ரோ சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். இந்த இணை முதல் விக்கெட்டுக்கு 102 ஓட்டங்கள் சேர்த்தது. றோய் 43 ஓட்டங்களில் வெளியேறினார்.

பெயர்ஸ்ரோ அரைச்சதமடித்து 63 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து இறங்கிய ஜோ ரூட் பொறுப்புடன் ஆடினார். அவருக்கு மற்ற வீரர்கள் ஒத்துழைப்பு அளிக்கவில்லை. முதலில் நிதானமாக ஆடிய ஜோ ரூட் அரைச்சதமடித்தார். அதன்பின் அதிரடியாக ஆடினார். அவர் 86 ஓட்டங்களுடன் வெளியேறினார். இறுதியில், இங்கிலாந்து 46.5 ஓவரில் 271 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன் மூலம் தென்னாபிரிக்க அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

தென்னாபிரிக்கா சார்பில் அன்ரிச் நோட்ஜே 4 விக்கெட்களும், ஷம்சி, மார்க் ரம் தலா 2 விக்கெட்களும் வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது வான் டெர் டுசனுக்கு அளிக்கப்பட்டது. (ஐ)




## ஐ. சி. சி. தரவரிசை போல்ட் முதலிடம்!

டுபாய், ஜுலை 21

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) வெளியிட்டுள்ள பந்துவீச்சாளர்களுக்கான ஒருநாள் தரவரிசையில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிரெண்ட் போல்ட் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் 3ஆவது போட்டியில் விளையாடாததால் ஐ. சி. சி. பந்துவீச்சாளர்களுக்கான ஒருநாள் தரவரிசையில் பும்ரா 2ஆம் இடத்துக்கு இறங்கியுள்ளார். இதனால் முதலிடத்தை நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிரெண்ட் போல்ட் மீண்டும் கைப்பற்றியுள்ளார். 3ஆவது இடத்தில் பாகிஸ்தானின் ஷாஹீன் அப்ரிடி உள்ளார். இந்தியாவின் சஹால் 16ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

துடுப்பாட்ட தரவரிசையில் பாகிஸ்தானின் பாபர் ஆஸம் முதலிடத்தில் உள்ளார். இந்தியாவின் விராட் கோலி 4ம் இடத்துக்கு இறங்கியுள்ளார்.

## கோலி போன்ற திறமையானவரை ஒருபோதும் தவிர்க்க முடியாதது! தினேஷ் கார்த்திக்

புதுடில்லி, ஜுலை 21

விராட் கோலி போன்ற திறமையான வீரரை ஒருபோதும் தவிர்க்க முடியாது என்று இந்திய கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார். கோலி மோசமான நிலையில் விளையாடி வரும் சூழலில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் விராட் கோலி, மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடரில் இடம்பெறவில்லை. அவருக்கு ஓய்வு அளிப்பதாக சொல்லப்பட்டுள்ளது. இருந்தாலும் இது ஓய்வா அல்லது அவர் அணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டாரா என்ற விவாதம் இப்போது ரசிகர்களிடையே எழுந்துள்ளது.

இந்நிலையில், கோலிக்கு ஆதரவாகப் பேசியுள்ளார் இந்திய அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட தினேஷ் கார்த்திக். இவர், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காக கோலியுடன் இணைந்து விளையாடி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"கடந்த காலங்களில் விராட் கோலி சர்வதேச கிரிக்கெட்டில் ஓட்டங்கள் குவிப்பதை அனுபவித்த வீரர். இப்போது அவருக்கு சிறந்த ஓய்வு கிடைத்துள்ளது. நிச்சயம் இதன் மூலம் தன்னை புத்துணர்ச்சியூட்டி மீண்டு வருவார். மீண்டும் சிறப்பாக களத்தில் அவர் செயல்படுவார் என நம்புகிறேன். அவரைப் போன்ற திறமையான வீரரை ஒருபோதும் தவிர்க்க முடியாது" என தினேஷ் கார்த்திக் தெரிவித்துள்ளார்.

மேலும், "அணியில் இடம்பிடிக்க வீரர்களுக்கு மத்தியில் எப்போதுமே ஓர் ஆரோக்கியமான போட்டி இருக்கும். அதுதான் இந்திய கிரிக்கெட்டின் அழகு. இந்தப் போட்டி அதன் ஒரு பகுதி - என்றார். (ஐ)






## தென்னாபிரிக்க அணி புதுவிதமான சாதனை!

செஸ்டர் லீ ஸ்ட்ரீட், ஜுலை 21

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கா அணியானது தற்போது ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கும் இடையேயான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

இந்தப் போட்டியில் 62 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றது.

இந்த போட்டி இங்கிலாந்து வீரரான பென் ஸ்டோக்ஸ்க்கு கடைசி ஒருநாள் போட்டி என்பதால் இந்த போட்டியில் இங்கிலாந்து அணி நிச்சயம் வெற்றி பெறும் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இதே வேளையில் இந்த போட்டியில் தென்னாபிரிக்க அணியின் துடுப்பாட்டத்தின்போது ஒரு வினோதமான நிகழ்வும் நடந்துள்ளது.

ஏனெனில், 50 ஓவர்கள் கொண்ட இந்த போட்டியில் தென்னாபிரிக்க அணி 333 ஓட்டங்கள் குவித்தும் அந்த அணியின் வீரர்கள் ஒருவர்கூட ஒரு சிக்ஸரை கூட அடிக்கவில்லை. ஆனால், அந்த அணியின் சார்பில் 32 பௌண்ட்ரிகள் விளாசப்பட்டன.

இதன் மூலம் தென்னாபிரிக்கா அணி எந்த ஒரு சிக்ஸரும் அடிக்காமல் ஒருநாள் கிரிக்கெட்டில் இரண்டாவது அதிகபட்ச ஓட்டத்தைப் பதிவு செய்தது. 2011ஆம் ஆண்டு சிட்னியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இங்கிலாந்து 333/6 ஓட்டங்களை எடுத்திருந்தது.

2020இல் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக இலங்கை அணி 345/8 ஓட்டங்களை எடுத்தது. ஒரு சிக்ஸர் கூட அடிக்காமல் அதிக ஓட்டங்கள் எடுத்த அணியாக இலங்கை அணி முதல் இடத்தில் உள்ளது. (ஐ)

# இலங்கை ஜனாதிபதித் தெரிவில் தலையீடு எதுவும் செய்யவில்லை

## செய்திகளை மறுத்தது இந்தியா

**கொழும்பு, ஜூலை 21**

**இலங்கை ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக இலங்கை பாராளுமன்றத்தில் நடைபெறும் வாக்களிப்பு தொடர்பாக இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் மீது செல்வாக்கு செலுத்தும் நோக்குடன் இந்தியாவிலிருந்து அரசியல் ரீதியான அழுத்தம் வழங்கப்பட்டதாக ஆதாரமற்றதும் ஊகங்களின் அடிப்படையிலும் வெளியாகியிருக்கும் ஊடக அறிக்கைகள் தொடர்பாக நாம் அறிந்துள்ளோம் என இலங்கைக்கான இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.**

இந்த ஊடக அறிக்கைகள் முழுக்க முழுக்க பொய்யான தென நாம் திட்டவட்டமாக மறுக்கின்றோம். சிலரது கற்பனையின் தோற்றப்பாடாகவே இவ்வாறான அறிக்கைகள் அமைகின்றன என்றும் நேற்று பிற்பகல் அறிக்கை யொன்றை விடுத்து இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜனநாயக வழிமுறைகள், நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசியலமைப்பு விதிகள் ஆகியவற்றுக்கு அமைவாக தமது அபிலாஷைகளை நனவாக்க விரும்பும் இலங்கை மக்களுக்கு இந்தியா ஆதரவளிப்பதாகவும் இன்னொரு நாட்டின் உள்விவகாரங்கள் மற்றும் ஜனநாயக நடவடிக்கைகளில் தலையிடுவதில்லை என்றும் மீண்டும் வலியுறுத்தி கூறப்படுகின்றது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜூலை 27 ஆம் திகதி வரை பாராளுமன்று ஒத்திவைப்பு

*கொழும்பு, ஜூலை 21*

பாராளுமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பிற்காக நேற்று காலை 10 மணிக்கு பாராளுமன்றம் கூடியது.

இதன் அடிப்படையில், இலங்கையின் 8 ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமங்க பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியதை அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, தினேஷ் குணவர்தன உள்ளிட்டோரும் உரை நிகழ்த்தினர்.

இதனையடுத்து சபை நடவடிக்கைகள் நிறைவடைந்தன.

பாராளுமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. (அ)

# விபத்தில் மாநகர சபை ஊழியர் ஒருவர் மரணம்

*கொழும்பு, ஜூலை 21*

நீர்கொழும்பு நகரில் இடம்பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் நீர்கொழும்பு மாநகர சபையில் கடமை புரியும் ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பு, தலாதுவ வீதியைச் சேர்ந்த 56 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு நகரை நோக்கிப் பயணித்த, நீர்கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரப் பெட்டியின் பின்பக்கமாக இருந்து பயணித்த குறித்த நபர், கீழே விழுந்தமையினால் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவ்வாறு வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்த குறித்த நபரை அங்கிருந்தவர்கள் உடனடியாக நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என நீர்கொழும்பு பொலிஸார் கூறினர்.

விபத்துடன் தொடர்புடைய உழவு இயந்திரத்தை செலுத்திச் சென்ற சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# பாராளுமன்றத்தை அண்மித்த வீதிகளில் பலத்த பாதுகாப்பு

*கொழும்பு, ஜூலை 21*

பாராளுமன்றத்தை அண்மித்த வீதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார். (அ)

# ரணில் ஜனாதிபதியாக தெரிவானமைக்கு வவுனியாவில் வெடி கொழுத்தி வரவேற்பு

*வவுனியா, ஜூலை 21*

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டமைக்கு வவுனியாவில் ஆதரவாளர்கள் வெடி கொழுத்திக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருந்தமையை அடுத்து வவுனியா நகர்ப் பகுதியில் ஆதரவாளர்கள் வெடி கொழுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)



# ரணிலின் பயணத்துக்கு முழு ஆதரவு வாழ்த்து கூறிய இ.தொ.கா. தலைவர்

*கொழும்பு, ஜூலை 21*

நாட்டின் 8ஆவது ஜனாதிபதியாக பாராளுமன்ற வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு, இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தனது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க துரிதமாக செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பொறுப்பேற்ற இரண்டு மாதகாலங்களில் நாட்டில் பொருளாதார பிரச்சினையை சீர்செய்வதற்காக வெளிநாட்டு உதவிகளை பெறுவதற்காக பல்வேறு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான கட்சி என்ற அடிப்படையில் இறுதி தருணம் வரை பல



கோணங்களில் கலந்துரையாடல் நடத்தியே யாருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக முழுமையாக ஆராய்ந்து இ.தொ.கா முடிவெடுத்தது.

நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் மற்றும் சர்வதேச நட்புறவை கொண்ட நபர் யார் என்பதன் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இ.தொ.கா மக்களின் நலன்களை ஆராய்ந்து அதற்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில்தான் எப்போதும் தீர்மானம் எடுத்துவருகிறது. அதன் அடிப்படையில் தான் ரணில் விக்கிரமசிங்கேவுக்கு ஆதரவளித்துள்ளோம். நாட்டை மீட்டெடுக்க அவர் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவோம். புதிய ஜனாதிபதியின் பயணம் வெற்றிபெற இ.தொ.கா வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது. (அ)

# வெளிநாட்டு அஞ்சல் பொதிகளை ஏற்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

*கொழும்பு, ஜூலை 21*

அமெரிக்கா, நெதர்லாந்து மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கான தபால் பொதிகளை ஏற்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்தார்.

குறிப்பிட்ட நாடுகளுக்கான அஞ்சல் விநியோகங்களை ஏற்றுக்கொள்ளும் செயற்றிட்டம் குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டிருந்தது.



இதனிடையே, வெளிநாட்டு தபால்களுக்கான கட்டணங்களையும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் அதிகரிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தனியார்துறை பஸ்கள் போக்குவரத்து பாதிப்பு

*கொழும்பு, ஜூலை 21*

தனியார் போக்குவரத்துத் துறை நேற்றும் பாதிக்கப்பட்டதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

தேவையான எரிபொருள் கிடைக்காமையால் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவைர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, 3600-இற்கும் அதிக பஸ்கள் நேற்று போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டதாக இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது. இதனிடையே, வழமையான கால அட்டவணைக்கு ஏற்ப ரயில் சேவைகளும் நேற்றுமுன் னெடுக்கப்பட்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## அரசியல்...

மைப்பு டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளித்தது. ஆனால், நேற்றுப் பாராளுமன்றில் நடந்த வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவானார். இதையடுத்து, அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

பாராளுமன்றத்தில் புதிய ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பொதுவாக இதுதான் நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டநிலையில் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தேர்வுசெய்யப்பட்டமை ஆச்சரியமானதல்ல. ஆனால், இந்த முக்கியமான தருனத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரலாற்றுத் தவறை மீண்டும் செய்துள்ளது.

மக்களின் எதிர்பார்ப்புகளையும் அபிலாசைகளையும் பொருட்படுத்தாது கூட்டமைப்பின் தலைமைத்துவம் அரசியல்ரீதியில் ஒரு சிலரின் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கியிருப்பது மிகவும் தெள்ளத் தெளிவானது. இலங்கை அரசியலில் பொறுப்புவாய்ந்த பதவியில் யார் அமரப் போகிறார் என்பதல்ல நமது விடயம். வரப்போகும் நபருடன் நமது பிரச்னைகளைப் பேசித் தீர்ப்பதற்கான வழிமுறையொன்றைக் கண்டடைதல்தான் அரசியல் முதிர்ச்சி. அப்படிப்பட்ட முதிர்ச்சி கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் நடவடிக்கையில் எந்தவோர் இடத்திலும் பிரதிபலிக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

சிறுபிள்ளைக்கும் விளங்கும் நடப்பு அரசியல் யதார்த்தம் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தால் புரிந்துகொள்ளப்படாத அதிசயத்தை என்னவென்று சொல்வது. எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த தமிழ்த் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் வாக்குகள் இப்போது தமிழர் பிரச்னைக்குத் தீர்வுவொன்று குறித்துப் பேசமுடியாத நிலையில் வீணாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரசியல் தலைமைத்துவம் என்பது காலத்தின் பொருத்தப்பாட்டை அறிந்து அரசியல் நடப்பைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற நிலையில் மக்களுக்குப் பயன்தரத்தக்க நிலைப்பாட்டில் உறுதியாக நிற்பதோடு தன்னோடு இணைந்து பயணிக்கும் அனைவரையும் அதே நிலைப்பாட்டில் உறுதியோடும் திருப்தியோடும் நிலைத்திருக்கச் செய்வதாகும். ஆனால், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் விட்டுள்ள இந்தத் தவறு, ரணிலின் ஆட்சிக்காலத்தில் இனி எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் தமிழர் தரப்பு நெஞ்சை நிமிர்த்தி நின்று எதிர்பார்க்கவும் கேட்கவும் முடியாது செய்துள்ளது.

தவறான மதிப்பீடு மற்றும் தவறான வழிநடத்தல்களால் தமிழ்த் தேசிய இலக்கை அடைய முடியாத நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இது தொடர்பான உபாயங்களை செதுக்கி தமிழர் அரசியல் இருப்பை உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். எனவே, பொறுப்புக்களை கடந்து செல்லாமல் உடனடியாக மத்திய குழுவைக் கூட்டி நடந்த தவறுகளல்ல தப்புக்களுக்கான காரணங்களை ஆராய்வது மட்டுமின்றி பொறுப்புக்கூறவேண்டியதும் மிகவும் இன்றியமையாதது - என்றுள்ளது. (ஐ)

## ராம் விடுதலை...

பிரிவினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். நேற்று 6 வருட தண்டனைக் காலம் நிறைவு பெற்ற நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதியாக செயற்பட்டிருந்த ராம் கடந்த 2009 மே 19 யுத்தம் மௌனித்த பின்னர் திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதையடுத்து இராணுவப் புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்பின் கீழ் அவர் அம்பாறை தம்பிலுவில் பிரதேசத்தில் குடியேறி வாழ்வாதாரமாக விவசாயம் மேற்கொண்டுவந்தார்.

இந்த நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் பெற்று ரணில் அரசாங்கம் ஆட்சியேறியதும் சாவகச்சேரிப் பிரதேசத்தில் தற்கொலைக் குண்டு அங்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டின் பெயரில் முன்னாள் விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி ராமை தம்பிலுவில் வைத்து பயங்ரவாத தடுப்பு பிரிவினரால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரணையின் பின்னர் அவருக்கு எதிராக வழக்கு தொடர்ந்து வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இதனை தொடர்ந்து அவர் பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட 6 வருட கால தண்டனைக்காலம் முடிவுற்றது. இதனை அடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை அவர் மட்டக்களப்பு உயர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது நீதிபதி அவரை விடுதலை செய்தார். (அ)

## இன்றுமுதல்...

பதிவு இலக்கத்தின் இறுதி எண்ணை அடிப்படையாகக் கொண்டு விநியோகிக்கப்படும். இதன்படி, 0, 1, 2 இலக்கங்களில் முடியும் வாகனங்களுக்கு செவ்வாய், சனிக்கிழமைகளிலும், 3, 4, 5 எண்களில் நிறைவுறும் வாகனங்களுக்கு வியாழன், ஞாயிறு தினங்களிலும் 6, 7, 8, 9 ஆகிய இலக்கங்களில் முடிவடையும் வாகனங்களுக்கு திங்கள், புதன், வெள்ளிக் கிழமை களிலும் எரிபொருள் வழங்கப்படும்.

அத்துடன், மோட்டார் சைக்கிளுக்கு 1,500 ரூபாய்க்கும், முச்சக்கர வண்டிக்கு 2 ஆயிரம் ரூபாய்க்கும், கார் அல்லது வானுக்கு 7 ஆயிரம் ரூபாய்க்குமே எரிபொருள் வழங்கப்படும்.

கியூ. ஆர். குறியீடு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்வரை எரிபொருள் அட்டைகளுக்கே எரிபொருள் வழங்கப்படும். அட்டையில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் நிலையத்துக்கு மேலதிகமாக வேறு எரிபொருள் நிலையத்திலும் அந்த அட்டையைப் பயன்படுத்தி எரிபொருளைப் பெறலாம்.

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிலையம் அத்தியாவசிய தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் தவிர்ந்த ஏனைய எரிபொருள் நிலையங்களில் எரிபொருளைப் பெற முடியும்.

தனியார் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகள், பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபை ஊடாக வழமை போன்று டீசல் விநியோகிக்கப்படும்.

டீசல் விநியோகம் அந்தந்த பிரதேச செயலாளரின் மேற்பார்வையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படும் - என்றும் தெரிவித்தார்.

(பெற்றோல், டீசல் விநியோகிக்கப் படும் நிலையங்கள் பக்கங்கள் 2, 16 இல்)

## ஊசிமூலம்...

நிமிடங்களிலேயே அவர் துடிதுடித்து மரணமானார்.

இளைஞரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. அவரின் உடலில் இருந்து பெற்றப்பட்ட மாதிரியில் போதைப் பொருள் நேர்மறை என அறிக்கையிடப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் இடம்பெறும் பரிசோதனைகளை தொடர்ந்து சடலம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படும்.

இதேசமயம், யாழ். மாவட்டத்தில் அண்மை நாட்களாக போதைப்பொருள் பயன்பாடு காரணமாக மரணங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தினேஷுக்கு பிரதமர் பதவி?



கொழும்பு, ஜூலை 21

புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க கடமையேற்ற பின்னர், தினேஷ் குணவர்தன பிரதமராக நியமிக்கப் படவுள்ளார்.

அத்துடன், சர்வக்கட்சி அரசுக்கும் ரணில் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

# 575 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

காரைநகர் கடற்கரையில் கடற்படையினர் நடத்திய விசேட நடவடிக்கையில் 575 கிலோ 600 கிராம் கேரள கஞ் சாவை ஏற்றிச் சென்ற டிங்கி படகு ஒன்றைக் கைப்பற்றிய தோடு 2 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கசூரினா கடற்கரைப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது, கடலில் சந்தேகத்துக்கு இடமான படகில் இருந்து 17 பொதிகளில் சுமார் 575 கிலோ 600 கிராம் கேரள கஞ்சா கைப் பற்றப்பட்டது.

மேலும், இந்த சட்டவிரோத செயலுக்கு பயன்படுத்தப்பட்ட டிங்கி படகு மற்றும் கேரள கஞ்சா கடத்தலில் தொடர்புடைய 2 சந்தேக நபர்களையும் கடற்படையினர் கைது செய் துள்ளனர்.

இந்த நடவடிக்கையில் கைப் பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த மதிப்பு 172 மில்லியன் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் மாதகலை சேர்ந்த 42 மற்றும் 51 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த சந்தேகநபர் கள் கேரள கஞ்சா மற்றும் டிங்கி படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப் படைக்கப்படவுள்ளனர். (ஐ)

## ஜனாதிபதியானார்...

முன்னதாக 2019 நவம்பர் தேர்தல் மூலம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானார். பொருளாதார நெருக்கடிகளால் நாடு முழுவதும் அவருக்கு எதிராகப் போராட்டங்கள் வெடித்திருந்தன. இதைத் தொடர்ந்து கடந்த 14ஆம் திகதி அவர் சிங்கப்பூருக்கு தப்பிய நிலையில், தனது இராஜிநாமா கடிதத்தை அனுப்பி வைத்தார். இதைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியானார்.

இதைத் தொடர்ந்து அரசமைப்பு விதிகளின்படி பாராளுமன்றம் கூடியது. ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் நேற்று முன்தினம் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். இதைத் தொடர்ந்து நேற்று ஜனாதிபதியைத் தெரிவதற்காக பாராளுமன்றில் வாக்கெடுப்பு நடந்தது.

இதற்கமைய 134 வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரமசிங்க நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவானார்.

வாக்கெடுப்பில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்டாயம் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றுக்கு வந்து வாக்களித்தனர். இதில், சமன்பிரிய ஹேரத் சேலைன் போத்தலுடன் வருகை தந்து வாக்களித்திருந்தார்.

இதேசமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணிய, சுயாதீனமாக இயங்கும் கட்சிகள், பெரமுன கட்சியின் ஒரு பிரிவினர் டலஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவை தெரிவித்திருந்தன.

இதேபோன்று, பெரமுன, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஈ. பி. டி. பி., தேசிய காங்கிரஸ் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிந்து...

றுள்ள நிலைமை தொடர்பாக நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

எனவே, என்னுடன் இணைந்து போட்டியிட்ட டலஸ் அழகப்பெரும மற்றும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நான் இணைந்து பணியாற்ற வருமாறு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறேன்.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் நாம் அழைப்பு விடுக்கிறோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

நாம் பிரிந்து செயற்பட்ட காலம் இத்தோடு முடிவுற்றுவிட்டது. நாம் இனி மேல் ஒன்றாக பயணிக்க வேண்டும்.

நாளை முதல் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்த நாம் தயாராகவே உள்ளோம்- என்றார். (அ)

## டலஸையே...

செயல்படுவேன் என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றதை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கேள்வி - உங்களின் எதிர்வாத அரசியல் கொள்கைவாதியானவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒருவேளை நீங்களும் அவருக்கு வாக்களித்திருப்பீர்கள்?

பதில் - இல்லை, அவ்வாறில்லை.

கேள்வி - அரசாங்கம் ஸ்தாபிப்பது எதிர்வரும் காலத்தில் எவ்வாறானதாக அமையும்?

பதில் - அவதானத்துடன் உள்ளோம், எந்த அரசாங்கம் அமைந்தாலும் மக்களுக்காக சேவையாற்ற வேண்டும். மக்களுக்காக சேவையாற்றும் அரசாங்கத்தை எதிர்பார்த்துள்ளோம்.

கேள்வி - அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளீர்களா?

பதில் - இதுவரை அவதானம் செலுத்தவில்லை, கட்சி எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய செயல்படுவேன்.

கேள்வி- டலஸ் அழகபெருமவின் பெயர் பரிந்துரையை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜீ. எல். பீரிஸ் உறுதிப்படுத்தினார். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன ?

பதில்- டலஸ் அழகபெருமவை நாங்கள் முன்னிலைப்படுத்தினோம் - வாக்களித்தோம். இருப்பினும் அவர் தோல்வியடைந்தார். ஒருவர் வெற்றிபெற்றால் பிறிதொருவர் தோல்வியடைவார் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையுடன் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும்

## சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை21

**இலங்கையுடனான நிதி மீட்புப் பேச்சுக்களை முடிந்தவரை விரைவாக முடிக்கமுடியும் என்று சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை கொண்டிருப்பதாக நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.**

நெருக்கடியால் பாதிக்கப்பட்ட இலங்கையில் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்வதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

ரோக்கியோவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், இலங்கையில் உள்ள மக்களின் நல்வாழ்வில் தமது நிதியம் மிகவும் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று கூறினார்

இலங்கை, எரிபொருள் உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான பற்றாக் குறையை எதிர்நோக்கியுள்ளதாகவும் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா குறிப்பிட்டுள்ளார். (அ)

# வாரத்தில் 3 நாட்கள் மட்டுமே பாடசாலைகள் திறக்கப்படும்

கொழும்பு, ஜூலை 21

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை வாரத்தின் 3 நாட்கள் மாத்திரம் பாடசாலைகளை நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது. அதற்கமைய திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய 3 நாட்களிலும் பாடசாலைகள் வழமையான நேர அடிப்படையில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு கல்வியமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் நடைபெறாத புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களுக்கு வீட்டிலிருந்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்தல் அல்லது இணையத்தில் கற்பித்தல் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
05 - 09 - 1958

மறைவு
19 - 07 - 2022

## கனகரத்தினம் ஸ்ரீரங்கநாதன்

யாழ். கோண்டாவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் ஸ்ரீரங்கநாதன் அவர்கள் 19.07.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கனகரத்தினம்(யைவைெநச), தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம், லட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும்,ரதிதேவி அவர்களின் அன்புக் கணவரும்,பிரபா, கஜன், ஜெகன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,நவுனித் அவர்களின் மாமனாரும்,குலசிங்கம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி தம்பதிகளின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான முருகையா கமலேஸ்வரி(பூமணி) தம்பதிகளின் மருமகனும்,முரளீதரன், யுகபாலன், சந்தானகோபால், பேரின்பநாயகி, வரதாமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,மைதிலி, காலஞ்சென்ற லோகநாயகி, கணேசலிங்கம், உதயதாஸ், ஞானாந்தம்-ரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சித்திரகலா-சிவானந்தன், விலோஷனி- செல்வசுந்தரா, பிரகாஜினி-திருக்குமரன், கோகுலன், திவாகரன், ஜெனித்தா - கௌதமன், சகானா, சர்வேஸ், ஆனந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும்,ஆர்த்தி, ஆதித்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற பிரவினி, ஹாரிசன், லக்ஷயா, பானுஜா, கஜலக்ஷன், கிஷானிகா, விதுர்ஜன், திருக்ஷிகா, விகாஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

K.K.S Road ,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**வீடு - குடும்பத்தினர்.** Mobile : +94212054434

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்றுமுதல் டீசல் விநியோகிக்கப்படும் நிலையங்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை ஓட்டோ டீசல் விநியோகிக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பெயர்களை மாவட்ட செயலர் அறிவித்துள்ளார்.

அவரின் அறிவிப்பின்படி, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம் - பண்டத்தரிப்பு, கே. தேவகுருநாதன் - நல்லூர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் - சாவகச்சேரி, அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் - மல்லாகம், யாழ். மாநகர ப. நோ. கூ. சங்கம் - யாழ்ப்பாணம், எஸ். சரவணபவன் - யாழ்ப்பாணம், தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் - தெல்லிப்பழை, சங்கானை ப. நோ. கூ. சங்கம், லிவர்பூல்ஸ் நேவிகேசன் - யாழ்ப்பாணம், கே. சண்முகரத்னம் காரைநகர்.

ஜே. நடராஜா - உரும்பிராய், என். விஸ்வலிங்கம் - சிறுப்பிட்டி, கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் - நெல்லியடி, தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம் - கைதடி, மானிப்பாய் பரிஸ் ப. நோ. கூ. சங்கம் - மானிப்பாய், தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் - கொடிகாமம், ராஜன் உமையாள் - யாழ்ப்பாணம், சி. வேதநாயகி - புன்னாலைக்கட்டுவன், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் - வல்வெட்டித்துறை, நல்லூர் ப. நோ. கூ. சங்கம் - நல்லூர்.

வலி. கிழக்கு வடக்கு பிரிவு ப. நோ. கூ. சங்கம் - அச்சுவேலி, என். எஸ். நாகலிங்கம் அன் சன்ஸ் - சுன்னாகம், வலி. கிழக்கு தெற்குப் பிரிவு ப. நோ. கூ. சங்கம் - கோப்பாய், செல்லையா உதயகுமார் - சண்டிலிப்பாய், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம் - உடுவில், புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கம் - புங்குடுதீவு, சிறீ லங்கா கூட்டுறவு மார்கெட்டிங் பெடரேஷன் - யாழ்ப்பாணம், வேலணை ப. நோ. கூ. சங்கம் - வேலணை, புலோலி ப. நோ. கூ. சங்கம் - புலோலி, ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் - ஊர்காவற்றுறை.

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் - குஞ்சர்கடை, ஏ. எம். தங்கநாயகம் - கோப்பாய், கமலாதேவி கதிரேசம்பிள்ளை - சுன்னாகம், எஸ். தர்மவரதன் - மருதனார்மடம், கே. எஸ். பொன்ம்பலம் அன் சன் - கைதடி, ஏ. எம். தனநாயகம் - கொக்குவில், திருமதி ஏ. பத்மநாதன் - வல்வெட்டித்துறை, எஸ். சுதர்சன் - நாவற்குழி - யாழ்ப்பாணம், முருகேசு குணரத்தினம் - யாழ்ப்பாணம், ஜே. ஸ்ரீசங்கர் - பருத்தித்துறை,

யோகேஸ்வரி சின்னையா - மந்திகை, திருமதி ஜே. கனகரஞ்சன் அன் சகோதரிகள் - சுன்னாகம், ரத்னம் எரிபொருள் நிரப்பு நிலையம் - திருநெல்வேலி, கே. ஜெயபிரணவன் - கொக்குவில், தர்சினி கண்ணதாசன் - சண்டிலிப்பாய், கந்தசாமி லோகராணி - தெல்லிப்பழை, ரி. அம்பலம் - நெடுந்தீவு, குருநகர் மீன்பிடி - குருநகர்

ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஓட்டோ டீசலைப் பெற முடியும். (ஐ-3)

# ரயிலில் மோதுண்டு யானை பலி

கொழும்பு, ஜூலை 21

திருகோணமலை-கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுக் காலை காட்டு யானையொன்று கடுகதி ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக அக்கோபுர பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற ரயிலில் அக்போபுர பகுதியில் வைத்து காட்டு யானை மோதுண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்துள்ள யானைக்கு பன்னிரண்டு வயது இருக்கலாம் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சட்டவிரோத எரிபொருள் பதுக்கல் 9 நாள்களில் 997 பேர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 21

சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்த குற்றச்சாட்டில் கடந்த 9 நாட்களில் 997 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி முதல் நேற்று காலை 6 மணி வரையான 9 நாட்களாக சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த சுற்றிவளைப்பில் 33,847 லீற்றர் பெற்றோல், 1,09,634 லீற்றர் டீசல் மற்றும் 19,214 லீற்றர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் 1077 சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- வழங்குபவர் உளவள துனையாளர் -யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்- சமுர்த்தி உத்தியோகஸ்தர்



7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- காதலும் கடந்து போகும்,நானும் சிங்கிள்தான் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-வீட்ல விசேசம்

**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம்- தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு